Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 27 சனிக்கிழமை (13.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 013

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு




இல. 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)




வரவேற்பு (08)



தமிழ் வெறுப்பு (10)




நண்பேன்டா (11)



பெருமையின் வழி... (13)



3 மில்லியன் கொலை (17)

# கூட்டமைப்பு மீது இந்தியா அழுத்தம்

## தெவுக்குழுவில் இணையும் சாத்தியம்

(புதுடில்லி)

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசு அமைக்கவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவது குறித்து ஆலோசிக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான உத்தர வாதத்துடன் அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பேச்சுக்களை ஆரம்பிக்கு மாயின் அதில் பங்கு கொள்வது குறித்துத் தாம் சாதகமாகப் பரிசீலிக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அறிவித்துள்ளார்.

இந்திய அரசின் அழுத்தத்தைத் தொடர்ந்தே மேற்படி முடிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்துள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். அதனைத் தொடர்ந்து இந்திய ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும்போதே இரா. சம்பந்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். தெரிவுக் குழுவில் பங்கெடுக்கும் விடயம் குறித்து இந்தியப் பிரதமருடனும் தாம் விரிவாக ஆராய்ந்ததாகவும் இனப் பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு எத்தகையது என்ற வரையறை குறித்து இருதரப்பும் விரிவாக ஆராய்ந்ததாகவும் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

## சமாதானத்திற்கான நோபல் பரிசு

### ஐரோப்பிய ஒன்றியத்திற்கு

உலகின் முன்னணி சர்வதேச அமைப்புக்களில் ஒன்றான ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இந்த ஆண்டுக்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் கடந்த ஆறு தசாப்த காலமாக ஆற்றி வரும் அளப்பரிய சமாதான சேவைகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. யுத்த கண்டமாகக் காணப்பட்ட ஐரோப்பாவை சமாதான கண்டமாக மாற்றியமைப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பு காத்திரமானது என நோபல் சமாதான விருது குழு சுட்டிக்காட்டியுள்ளது. உறுப்பு நாடுகளில் பொருளாதார நெருக்கடி, சமூகக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கை மாறியது சிசு தாய் உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

தகுந்த பராமரிப்பின்றியிருந்த ஒருநாள் குழந்தை ஒன்றை வைத்திருந்த இருவரும் அந்தக் குழந்தையின் தாயாரும் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன் குழந்தையும் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது. கைதடியைச்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் பீரிஸ் சூறாவளி விஜயம்

### செயலகத்தில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களின் கல்வித் தரம் உயர்வானதும் காத்திரமானதும் ஆகும். இதன் மூலம் அரச உத்தியோகங்களை எதிர்பார்ப்பதை விட்டு சுயமுயற்சியுடனும், முதலீடுகளினூடாகவும் வாழ்க்கைத் தரத்ததை உயர்த்த, புத்திசாலித்தனமாகச் செயற்படும் மக்களாக நான் உங்களைப் பார்க்கின்றேன் என்று நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், யாழ். செயலகத்தில் இடம்பெற்றகலந்துரையாடலின்போது இவ்வாறு

(19) ஆம் பக்கம் பார்க்க



## வடக்கில் கண்ணிவெடி அகற்றல் ஸ்தம்பிக்கும் அபாயம்

(கொழும்பு)

வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் நிறுவனங்களுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

பள்ளி மாணவர்களிடையே கண்ணிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் நிதிப்பற்றாக் குறையை எதிர்நோக்கியிருப்பதாக எப்.எஸ்.டி என்ற சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களில் புதைக்கப்பட்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலை மீது கழிவு ஓயில் வீச்சு

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் உயர்தர வகுப்பறைக்குள் இனந்தெரியாத விசமிகளால் நேற்று முன்தினம் இரவு கழிவு ஓயில் வீசப்பட்டுள்ளது. இச்சம்பவத்தால் உயர்தர வகுப்பறையின் தளபாடங்கள் முழுவதும் நாசமாக்கப்பட்டதுடன் வகுப்பறையின் ஆவணங்கள் (பாடப்பதிவுப் புத்தகம்) மீதும் கழிவு ஓயில் வீசப்பட்டுள்ளது. இந்த விசமத்தனமான செயலினால் இவ்வாறு செய்பவர்கள் தங்களையும் தாக்கக்கூடும் என வெளிமாவட்ட ஆசிரியர்கள் அச்சமடைந்துள்ளதுடன், இந் நடவடிக்கை தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மனித உரிமைகள் பேணல் படையினருக்குப் போதனை

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பில் இராணுவ உயர் அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அண்மைக் காலமாக இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்ததாக ஆணைக்குழுவின் செயலாளர் நிமல் புஞ்சிவோ தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிச் சந்தேகநபர் தற்கொலை முயற்சி

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டதாகக் கூறப்படும் சந்தேக்நபர் ஒருவர் மொனராகலை மாவட்ட நீதி மன்றில் கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சந்தேகநபர் பிளேட் ஒன்றினால் தனது கழுத்தை அறுத்துக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, அவர் மொனராகலை சிரகல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# வடக்கு நோக்கி நடைப் பயணம்


## இன்று கொடிகாமத்துக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு மாத்தறையிலிருந்து பருத்தித்துறை வரை நடைப் பயணத்தை மேற்கொண்டு வரும் கனடா நாட்டுப் பிரஜையான திருமதி ஒலிவியா அகஸ்ரின் இன்று கொடிகாமத்தை வந்தடையவுள்ளார்.

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தினரும், பொதுமக்களும் இணைந்து இன்றைய தினம் பிற்பகல் 3.00 மணியளவில் சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் பொது வரவேற்பு அளிக்கவுள்ளனர்.

மேலும் எதிர்வரும் 18 ஆம் திகதி பருத்தித்துறையில் அவரது நடைப்பயணம் நிறைவு பெற்றதும் அங்கும் மாபெரும் வரவேற்பு வைபவம் இடம்பெறவுள்ளது. இவ்விரண்டு நிகழ்வுகளிலும் மாற்றுத்திறனாளிகள், நலன் விரும்பிகள் தத்தமது வசதிக் கேற்ற இடங்களில் தவறாது பங்குகொண்டு அம்மையாரை வாழ்த்துமாறு ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் அறிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்ட உளநலப் பிரிவால் சர்வதேச உளநல நாள் நிகழ்வு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவிகளின் இசையும், அசைவும் நிகழ்வு நடைபெறுவதைக் காணலாம்.

## கடல் ஆமை பிடித்தவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் கடற்பகுதியில் கடல் ஆமை ஒன்றைப் பிடித்து வந்து வைத்திருந்தவருக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் மூவாயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த கடல் ஆமையையும், அதனைப் பிடித்த கடற்றொழிலாளியையும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பாரப்படுத்தினர்.

உடனடியாகவே அந்தக் கடல் ஆமையைக் கடலில் விடும்படி நீதவான் உத்தரவிட்டதையடுத்து ஊர்காவற்றுறைக் கடலில் ஆமை விடப்பட்டதுடன், அதனைப் பிடித்தவருக்கு மூவாயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது என யாழ் பிரதிப் பொலிஸ மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

## மருதங்கேணி வைத்தியசாலையில் விசேட வைத்திய சிகிச்சை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி வைத்தியசாலையில் வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்களிலும் அப்பகுதி மக்களுக்கான விசேட வைத்திய சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன.

மந்திகை வைத்தியசாலையிலிருந்து வரும் வைத்தியர்களால் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை நீரிழிவு, மூட்டுவலி, உயர் இரத்த அழுத்தம், தைரொக்சைட் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை, ஒவ்வொரு வியாழனும் பற்சிகிச்சை கிளினிக்குகளும் இடம்பெற்று வருகின்றன.

வாரத்தில் இரண்டு நாட்கள் பல்வேறு வகையான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுவதனால் மீள்குடியமர்ந்த வடமராட்சி கிழக்கு மக்கள் பெரும் பயனடைந்து வருவதுடன், நீண்ட தூரம் வைத்திய சிகிச்சைக்காக செல்லவேண்டிய அவசியமில்லை எனவும் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (38)

## வீதிப் புனரமைப்பு மீண்டும் ஆரம்பம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய பகுதிகளிலுள்ள உள்ளக வீதிகள் அண்மையில் பிரதேச சபையால் புனரமைக்கப்பட்டன.

எனினும், வத்திராயனிலுள்ள அரசடி வீதி புனரமைக்கப்படும் வேளை தம்மிடம் அனுமதி பெறப்படவில்லையெனத் தெரிவித்து கனியவளத் திணைக்களத்தினர் அவ்வீதிப் புனரமைப்பை இடைநிறுத்தியிருந்தனர்.

இந்தநிலையில், இடைநிறுத்தப்பட்ட வீதிப்புனரமைப்பிற்கான அனுமதி மீளவும் வழங்கப்பட்டதனை அடுத்த நேற்றைய தினம் குறித்த வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகின. (38)

## பாவனைக்கு உதவாத வீதி பயணிகள் பாடு திண்டாட்டம்

(குருநகர்)

யாழ்.வண்ணை சிவப்பிரகாசம் வீதி பல வருடங்களாகச் சேதமடைந்து குண்டும், குழியுமாக பாவனைக்கு உதவாமல் இருந்து வருகிறது.

இது சம்பந்தமாக பலமுறை சுட்டிக் காட்டப்பட்டும் இதுவரை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் ஐந்து மதகுகள் புனரமைப்பும், வீதி அகலிப்பு வேலைகளும் தொடங்கப்பட்டுள்ளதால் அரசடிச் சந்தியால் சிவப்பிரகாசம் வீதியூடாகப் பயணித்து தட்டாதெருச் சந்தியாலும், மானிப்பாய் வீதி, ஆலடிச் சந்தியாலும் வாகனங்கள் யாழ். நகரைச் சென்றடையும் மார்க்கமும் இருப்பதால் சிவப்பிரகாசம் வீதியைக் காப்பெற் வீதியாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கி உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (68)

## பாலியல் விழிப்புணர்வு நாடகம் கவனத்தை ஈர்த்த நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரிப் பயிலுநர்களின் விடியலைத் தேடி என்னும் பாலியல் விழிப்புணர்வு நாடகம் பாடசாலை மட்டத்திலும், பொதுமக்கள் மட்டத்திலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தற்போது அடிக்கடி இடம்பெற்றுவரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், போதைவஸ்து, மது, கைத்தொலைபேசி என்பவற்றினால் ஏற்படுகின்றது என்பதை நாடகம் மூலம் எடுத்துக்காட்டி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் சத்தியவதனியின் வழிகாட்டலில் புதிதாக இணைக்கப்பட்ட இப்பயிலுநர்கள் முதற்தடவையாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின விழாவில் இந்நாடகத்தை மேடையேற்றி நடித்துக் காட்டியதைத் தொடர்ந்து பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து தற்போது சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் முதியோர் தின, சிறுவர் தின விழாக்களில் நடித்துக் காண்பிக்கப்பட்டதன் மூலம் இதுவரை 9 மேடைகள் ஏறியுள்ளனர்.

தொடர்ந்தும் பல பாடசாலைகள் அழைப்பு விடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலகங்களும் இவர்களைப் பின்பற்றி பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமான விழிப்புணர்வு நாடகங்களை நடித்துக் காட்டுவதன் மூலம் சிறுவர்களும், ஏனையவர்களும் எச்சரிக்கையுடன் வாழ முடியும் என பொதுமக்கள் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். (104)

## உவர்நிலச் செய்கைக்கு நெடுந்தீவில் நெல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலுள்ள உவர் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான விதைநெல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் விதைநெல் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. 50 ஏக்கர் நிலப்பகுதிக்கான நெல் அண்மையில் விநியோகிக்கப்பட்டது.

சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் நெல்லினங்கள் இந்நிலங்களில் விளைவைத்தருவதில்லை என்ற முறைப்பாட்டையடுத்தே இவ்வாறு உவர் நிலங்களில் நல்ல விளைச்சலைத் தரவல்ல இன விதை நெல்லை வாழ்வு எழுச்சித் திட்டத்தின் மூலம் வழங்குவதாக விவசாய மேம்பாட்டு அதிகாரி ஒருவர் மாவட்டத் திட்டமிடல் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார். (இ)

### முதியோர் தின விழா

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச முதியோர் மற்றும் மாற்று ஆற்றலுடையோர் தினவிழா நாளை காலை 9.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை நீதிபதியும், வடமாகாண சத்தியசாயி சேவா நிலையத்தின் தலைவருமான இ.வசந்தசேனன், சிறப்பு விருந்தினராக சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி இன்பராஜ் நாளாயினி, கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.விமலன், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கொம் பேற் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (104)

## செம்மணி தடுப்புச் சுவர்களை புனரமைக்குமாறு கோரிக்கை

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி உப்பளப் பகுதியில் உள்ள நீர்த்தடுப்புச்சுவர்கள் புனரமைக்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

உப்பளத்தினுள் மழை காலங்களில் நீரை உள்ளே வருவதற்கு வழி செய்வதற்கும் பின்னர் உட்பகுதி நீர் வெளிச் செல்லாமலும் இருப்பதுடன், உப்பு விளைகின்ற காலப்பகுதியில் உள்ளே நீர் செல்லாத வகையிலும் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளினால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அண்மையில் மழை ஆரம்பமானதைத் தொடர்ந்து இப்பகுதியில் வெள்ள நீர் சேமிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த உப்பு விளைவிக்கப்படுகின்ற உப்பளமாக செம்மணி விளங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
கல்வியாண்டு 2010/2011 இற்கான

விரிவுரைகள் மீளாரம்பம்

கீழ்வரும் பீடங்களைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்குமான விரிவுரைகள் பின்வரும் திகதிகளில் மீள ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கலைப்பீடம் | 15.10.2012 |
| 2. | விவசாய பீடம் | 17.10.2012 |
| 3 | முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம் | 17.10.2012 |
| 4. | விஞ்ஞான பீடம் | 22.10.2012 |

பதிவாளர்
12.10.2012

(C/2073)

# ஆளுமைகளை வளர்ப்பதற்கு கலைஞர்கள் முயற்சிக்க வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்

(கிளிநொச்சி)

கலையும் சமூகமும், கலைஞனும் ஒன்றுடன் ஒன்று நெருங்கி வருகின்றபோதுதான் ஆக்கபூர்வமான கலைப்படைப்புக்களை வெளிப்படுத்த முடியும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட கலைஞர்கள் ஒன்றுகூடலும் தேவைப்பகுப்பாய்வும் நிகழ்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்கின்ற கலைஞர்களாகிய நீங்கள் உங்கள் கலை ஆளுமைகளை தற்போதுள்ள தளத்திலிருந்து தேசிய - சர்வதேச தரத்திற்கு எடுதது்ச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும் என்றார்.

இலக்கிய மன்றங்களின் முகாமைதது்வம் தொடர்பில் அ.கேதீஸவரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளரும் எழுத்தாளருமான கருணாகரன் 'கலையும் சமூகப் பணியும் என்ற தொனிப்பொருளிலும், மரபுரிமைச் சொத்துக்களின் பேணுகை என்ற விடயத்தில் மாவட்டக் கலாசார அலுவலர் மா.அருள்சந்திரன் ஆகியோர் கருததுரைகளை வழங்கினாாகள். மாவட்டத்தின் கலை வளாசசிக்குத் தேவையான அறிக்கைகள் தயாரிப்பதற்குரிய ஆலோசனைகள் கலைஞர்களால் முன்வைக்கப்பட்டதுடன், பட்டறையின் தொகுப்புரையினை உதவி மாவடட செயலாளர் திருமதி ப.ஜெயராணி வழங்கினார். (142, 160)

# வினாவிடைப் போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட தகவல் தொழில் நுட்ப வினாடி வினாப் போடடியின் வலய மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

பிரிவு -1

ரி.பரதன் - யாழ்ப்பாணக் கல்லூரி, கே.அபர்ணா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யூ.யதுசன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி,

பிரிவு - 2

எம்.நிருசன் - யூனியன் கல்லூரி, ஜெ.மனோஜ் - யாழ்ப்பாணக் கல்லூரி, எல்.லக்ஷாமரியன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.

பிரிவு - 3

பி.ஜீவகி - மானிப்பாய் மகளிர் கல்லூரி, பி.சிந்துஜன் - வயாவிளான் மத்திய மகாவத்தி, கே.கௌசிகன் - அருணோதயாக் கல்லூரி. (06)

# வீதியில் குவியும் சைக்கிள்கள் கவனிக்குமா? யாழ். மாநகரசபை

யாழ் நகரப்பகுதியில் பொருத்தமான இடங்களில் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் இல்லாததால் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த வகையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகினறனர். குறிப்பாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு பின் பகுதியில் மின்சார நிலைய வீதி மத்திய பஸ்தரிப்பு நிலைய பின் பகுதியிலிருந்து விக்டோரியா வீதிச் சந்திவரை இரு மருங்கிலும் மோட்டார் சைக்கிள்கள் காலை, மதியம், மாலை என மூனறு வேளைகளிலும் பல மணித்தியாலங்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனால் வாகனங்கள், பாதசாரிகள் மற்றும் பஸ் பயணிகள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர்.

இதனிடையில் சைக்கிள் பாதுகாப்பு என்ற போர்வையில் துரத்தித்துரத்தி 10 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. அதே வேளை மோட்டார் சைக்கிள், ஹெல்மெற் என்பவற்றிற்கு எந்த வித பாதுகாப்பும் கிடையாது. அத்துடன் அவ்வீதியிலுள்ள தனியார் கடைகள், நிறுவனங்களின் முன்பாகவும் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டு கட்டணம் அறவிடப்படுகின்றது.

இதனால் 'பிறின்ஸ் சிற்றி கம்பஸ்' மாணவர்கள் நிறுத்தி வைத்த மோட்டார் சைக்கிள்களை எடுக்க முடியாமல் மதிய போசனத்துக்கும் ஏனைய தேவைகளுக்கும் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்குப் பொறுப்பு வாய்ந்த மாநகர சபை மற்றும் அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க மாட்டார்களா எனப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (22)

# வடமராட்சி கலாசார பேரவையின் பண்பாட்டுப் பெருவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு கலாசார பேரவை நடத்தும் பண்பாட்டு பெருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை நெல்லண்டை அஞ்சடியக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கலாசார பேரவைத் தலைவரும் பிரதேச செயலருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும். இநநிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெனரின் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் முதன்மை விருந்தினராகவும், யாழ் மாவட்ட செலக கலாசார உத்தியோகத்தர் சி.விஜயரத்தினம் சிறப்பு விருநதினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா ரவீந்திரன், புலோலி பிரதேச சபை தவிசாளர் பூ.சஞ்ஜீவன், வல்வெட்டித்துறை நகர சபை உபதவிசாளர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நாட்டார் இசைக கதம்பம், வளமான வாழ்வுக்கு வழிசமைப்பது, ஆற்றல் மிக்க இளமையா? அனுபவம் மிக்க முதுமையா? என்ற தலைப்பில் பட்டிமன்றம், இசைநாடகம், கலை பரிதி விருது வழங்கல் என்பன இடம்பெறவுள்ளது. (109)

# மணற்காட்டில் விபத்து மூவர் படுகாயம்

(வடமராட்சி)

வடமராட்சியில் குடத்தனை, மணற்காடு சந்தியில் நேற்றுமுன் தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த தேவசிங்கம் சுதாகரன் (வயது -23), சி.நிரோசன் (வயது -19) மற்றும் நவாலி மானிப்பாயைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான நடராஜா அருள்றொபின்சன் (வயது -37) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சந்திப் பகுதியூடாக வந்த உழவு இயந்திரமும் எதிராக வந்த டிப்பர் வாகனமும் வேகக்கட்டுப்பாட்டை இழந்து நேருக்கு நேராக மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், உழவு இயந்திரத்தைச் செலுத்தி வந்த சாரதி உடனே இறங்கி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் உழவு இயந்திரப் பெட்டியில் இருந்து வந்த இருவரும் டிப்பர் வாகனச் சாரதியுமே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (116)

# காணாமற் போனவர்கள் குறித்து கிளிநொச்சியில் பதிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுக் காரியாலயத்தில் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்பேர்ன ஐவரது முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக இலஙகை மனித உரிமை ஆணைககுழுவின் யர்ழ். காரியாலய இணைப்பாளர் ரீ.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள மனித உரிமைக் காரியாலயத்தில் காணாமற்போனவர்களது பெற்றோர் இந்த முறைப்பாடுகளைப் பதிவு செயதிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடுகளின் படி போயிருந்தவர்கள் ஐவரும் ஆண்கள் எனவும் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மனித உரிமை ஆணைக்குழுவின் காரியாலயத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும பொதுமக்கள் பல்வேறுபட்ட மனித உரிமை சார்ந்த முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளமுடியும்.

கடந்த புதன்கிழமை யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரீ.கனகராஜ் மற்றும் அலுவலர்கள் கிளிநொச்சி மனித உரிமை காரியாலயத்திற்குச் சென்று மனித உரிமை சேவைகளில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கிடைக்கப்பெற்ற இந்த ஐந்து முறைப்பாடுகளிலும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் நிலவிய சூழலில் இவர்கள் காணாமற் போயிருந்தனர் எனவும் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (பா)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வினாடிவினாப் போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தினால் ஆரம்பப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையே சிறுவர்களுக்கான விநாடிவினாப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் தரம் 4, 5 அல்லது தரம் 5 இல் மாணவர்களைத் தெரிவு செய்வதுடன் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 4 மாணவர்கள் பங்குபற்ற வேண்டும்.

கோட்டமட்டப் போட்டிகள் எழுத்து மூலமாக அமையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் விடைகள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பாடசாலையில் பங்குபற்றும் 4 பேரின் புள்ளிகளையும் கூட்டிக் கூடுதலாக புள்ளிபெறும் பாடசாலை தெரிவு செய்யப்படும்.

கோட்டமட்டப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கு வட இந்து ஆரம்பப் பாடசாலையிலும், கரவெட்டி கோட்டத்துக்கு நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையிலும், மருதங்கேணி கோட்டத்திற்கு தாளையடி றோ.க.த.க பாடசாலையிலும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு ஏற்கனவே பெயர் விபரங்களை அனுப்பாத பாடசாலைகள் இன்று சனிக்கிழமைக்குள் முழுப்பெயரை ஆங்கிலத்தில் எழுதி இரு பிரதிகளை அனுப்பி வைக்குமாறும், வெற்றி பெற்ற குழுக்களுக்கான வலயமட்டப் போட்டி விலகல் முறையில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 16 மணிக்கு யாழ். வட இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (109)



வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் சர்வதேச உளநல தினவிழா வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய அக்குவைனஸ் கேட்போர்கூடத்தில் விரும்பத்தக்க மனிதராய் நம்பை நாமே செதுக்குவோம் எனும் தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கல்வி வலயத்தின் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு.சுபாஸ்கரன் உரையாற்றுவதையும் கலை நிகழ்வுகளையும் கண்காட்சியை அதிதிகள் பார்வையிடுவதையும் காணலாம். (160)

நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர்பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது. - பான்னி ப்ளேயர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## ஜனநாயகம் குறித்த நம்பிக்கை!

பசித்த மிருகங்கள் இரையைத் தேடுவது போல மக்களை உணர்ச்சியேற்றிக் கொந்தளிக்க வைப்பதற்கான செய்திகளுக்குக் காத்திருக்கும் நமது ஊடகங்கள், கிடைத்த ஒரு பிரச்சினை ஒரே நாளிலேயே தீர்ந்துவிட்ட தங்கள் ஏமாற்றத்தையும் பொருட்படுத்தாமல் மக்களுக்குக் கிடைத்த வெற்றியைப் நேற்றுப் பதிவு செய்தன.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் மலையாளபுரம், கிருஷ்ணபுரம் விளைநிலங்கள் பறித்தெடுப்பு; மக்களை விரட்டியடித்தனர் படையினர் என்று கொட்டை எழுத்தில் பரபரப்பூட்டுவதற்குக் கிடைத்த வாய்ப்பை ஒரே நாளில் நேற்றைய தினமே தமிழ்ப் பத்திரிகைகள் மீது இரக்கமேயில்லாத படையினர் தட்டிப் பறித்து விட்டது ஒருவகையில் கொடுமைதான்.

ஆனால், நிலங்கள் பறிபோன அந்த கிராமங்களைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொது அமைப்புகள் ஒன்றிணைந்து சென்று இராணுவத்தினருடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். அதைத் தொடர்ந்து, அங்கிருந்து தாங்கள் விலகுவதாகவும், விவசாயிகள் வழமைபோலவே தமது காணிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம் என்றும் இராணுவத்தினர் தெரிவித்து விட்டனர்.

பிரச்சினை இவ்வளவு சுலபமாக முடிந்துவிட்டால் யாரால்தான் தாங்கிக்கொள்ள முடியும்? ஆனாலும், ஏற்றிய உணர்ச்சியை சூடு ஆறாமலே நேற்றைய பத்திரிகைகள் இறக்கி வைத்தன. "விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கும் படையினரின் முயற்சி முறியடிப்பு" என்றும் "மக்களின் கடும் எதிர்ப்பால் பின்வாங்கினர் படையினர்" என்றும் மக்களோடு களத்தில் இறங்கித் தாங்கள் போராடிப் பெற்ற வெற்றியைப் பதிவுசெய்து கொண்டன.

ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிந்தாலும் நமது பத்திரிகைகளின் மக்களுக்கான போராட்டம் வெற்றிகளைக் குவித்து வருவது குறித்து நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். ஏனெனில் நமது கவலைகளில் பெரும்பகுதி இனி இருக்காது நீங்கிவிடப் போகிறது என்பதையே இது உணர்த்துகிறது.

மக்கள் தங்கள் நியாயங்களைச் சொல்லி எதிர்த்தால் இராணுவத்தினர் பின்வாங்கி விடுகின்றனர் என்ற, இந்த விவசாயிகள் மற்றும் ஊடகங்களுக்குக் கிடைத்த வெற்றியானது உண்மையில் நாம் ஒரு ஜனநாயகச் சூழலுக்கு மாறிக்கொண்டிருக்கிறோம் என்னும் நம்பிக்கையைத் தந்திருக்கிறது. மக்களை விரட்டியடித்துப் பறித்தெடுத்த நிலங்களையும், மக்கள் சென்று அவை தங்களுடைய நிலம் என்பதை உறுதிப்படுத்திக் கேட்டால் படையினர் திருப்பித் தந்துவிடுகிறார்கள் என்பது இந்த நாட்டில் உண்மையில் நம்பிக்கையான நல்ல அறிகுறியே.

அந்தவகையில், மக்களின் வெற்றியொன்றைப் பதிவு செய்து கொண்டாடியுள்ள நமது ஊடகங்களின் மகிழ்ச்சி புரிந்துகொள்ளத் தக்கதே. நாம் நம்மை இன்னும் கொஞ்சம் நல்லமுறையில் மாற்றிக் கொள்வதற்காக சில விஷயங்களை மட்டும் கவனத்தில் கொள்ளக் கேட்கலாம்.

"படையினர் முறியடிப்பு" விரட்டியடிக்கப்பட்டனர் இராணுவத்தினர்" என்பது போன்ற போர்க்காலச் செய்தி எழுத்துக்களில் இருந்து நாம் மெல்ல மெல்லவேனும் மாறுவது நல்லது. ஏனெனில், அந்தச் சூளுரைகளையும், யுத்தச் சூழ்நிலைமைகளையும் ஞாபகப்படுத்தும் வார்த்தைகளைக் கேட்டு மனம் நடுங்கக் கூடிய மக்களே இன்று நம்மிடையே.பெரும்பாலானவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, இந்த ஜனநாயக வெற்றிகளை நமது பத்திரிகைகள் ஜனநாயகத்தன்மை உள்ள சொற்களாலேயே விவரிக்க முயற்சிப்பதும் நல்லது. மக்கள்மீது அக்கறையுள்ள ஊடகங்கள் மக்களை அதிர்ச்சி கொள்ள வைக்காமல் எழுத முன்வரும் என நம்புவதில் என்ன தவறு? திரும்பவும் ஒரு யுத்தத்துக்குள் நமது மக்களைத் தள்ளுவதை சமூக அக்கறையுள்ள எவர்தான் விரும்பப் போகிறார்கள்?

- ஆசிரியர்

# டெங்கு நோயை தடுக்கும் வகையில் நோயாளர்களுக்கு ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் டெங்குக் காய்ச்சல் பரம்பல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்நிலையில் பல நோயாளர்கள் மிகப்பிந்திய நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வருவதையும், பரசிற்றமோல் வில்லைகளை அளவுக்கு அதிகமாக பாவிப்பதனையும் வைத்திய நிபுணர்கள் எமது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

எனவே வைத்திய நிபுணர்களால் காய்ச்சலினால் பாதிக்கப்படும் நோயாளர்களுக்கு வழங்கபட்ட சில ஆலோசனைகளை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி தற்போதைய சூழ்நிலையில் காய்ச்சல் ஏற்படும்போது அது டெங்குக் காய்ச்சலாக இருக்கலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பூரண ஓய்வில் இருக்கவேண்டும். வேலைகளுக்குச் செல்பவர்களும், மாணவர்களும் விடுமுறை பெற்று வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும். வீட்டிலும் கடுமையான வேலை எதுவும் செய்யாது பூரணமாக ஓய்வில் இருக்கவேண்டும்.

பொதுவாக டெங்குக் காய்ச்சலின் பின்விளைவுகள், இறப்புக்கள், காய்ச்சல் தணிந்த பினனரே ஏற்படுவது வழமை. எனவே காய்ச்சல் தணிந்த பின்னரும் 2 நாட்களுக்கு ஓய்வு அவசியம்.

மாணவர்கள் காய்ச்சல் ஏற்படும் காலத்தில் விளையாட்டுகளில் பங்குபற்றுவதைத் தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களில் டெங்குக் காய்ச்சலுடன் பரசிற்றமோல் வில்லைகளைப் போட்டுக் கொண்டு விளையாட்டில் ஈடுபட்ட இரண்டு மாணவர்கள் அநியாயமாக உயிரிழந்ததை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

காய்ச்சலின் போது போதிய நீராகாரங்களை அருந்தி உடலின் நீர்த்தன்மை வற்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சில நோயாளர்கள் பரசிற்றமோல் வில்லைகளை அளவுக்கு அதிகமாகப் பாவித்து சுய வைத்தியம் செய்வதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் ஈரல் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் சரியான வைத்திய ஆலோசனையின்படி பரசிற்றமோல் வில்லைகளைப் பாவிக்க வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு இது மிக அவசியம்.

மேலும் காய்ச்சலுடன் மயக்கம், வயிற்று வலி, வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படும். நோயாளர்கள் காலந்தாழ்த்தாது உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும் என ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# துர்க்கா சனசமூக நிலையத்தின் கட்டடத்திறப்பு விழா

(கைதடி)

கைதடி கிழக்கு கலைநகர் துர்க்கா சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

நிலையத் தலைவர் க.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்ான சி.சிறிதரன், ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவர் சி.துரைராசா, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் தி.தர்சினி, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.செ.ஜெகதீஸ் வரன், சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் சங்கரன் தங்கராசா, கைதடி கிழக்கு கிராம அலுவலர் சி.ரவீந்திரன், கைதடி பிரதேச சனசமூக நிலையங்களின் சமாச தலைவர் இ.கந்தசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் செயலாளர் பொன். சுகந்தன், சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர் த.சுதர்சன் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

# ஊதிய முரண்பாடு இல்லை; ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(திருநெல்வேலி)

நாட்டின் சகல பாகங்களிலும் தற்போது அதிபர் நியமனம் கிடைக்கப்பெற்ற அனைவருக்கும் வேதன முரண்பாடு இருக்காது என பிரதிக் கல்வி அமைச்சர் டி.எம்.விஜிதமுனிசொய்சா தெரிவித்தார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் விசேட சந்திப்பில் பிரதி அமைச்சர் இதனைத் தெளிவுபடுத்தினார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

சகல தரங்களிலும் அதிபர் நியமனம் கிடைக்கப்பெற்றவர்களுக்கு தாம் பதவி வகித்த ஆசிரியர் கடமையில் கிடைக்கப்பெற்ற வேதனத்தைவிட குறைவான வேதனம் வழங்கப்படமாட்டாது எனவும் அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் உறுதியளித்தார்.

ஆசிரியர் தரத்தில் கூடுதலான வேதனம் பெற்றவர்கள் அதிபர் தரம் பெற்று குறைவான வேதனத்தை பெறவேண்டியேற்படும் என்பதைச் சுட்டிக் காட்டியவேளை அவ்வாறு கூடிய வேதனத்தில் இருப்பவர்களை எவ்வகையிலும் குறைந்த வேதனக் கட்மைக்கு நியமிக்கப்பட முடியாதென்றும் அவர்கள் பெற்றுக்கொண்ட வேதனம் முழுமையாகக் கிடைக்குமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.(137)

# அதிகளவில் பிடிபடும் முள்ளிச்சங்கு மன்னார் மீனவர்கள் மகிழ்ச்சி

(மன்னார்)

மன்னார் மீனவர்களுக்கு கடல் அட்டை மற்றும் முள்ளிச் சங்கு என்பன தாராளமாக பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதாக மன்னார் மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

அகழ்வதற்கான அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

பல வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் மீனவர்களுக்கு குறித்த தடை காணப்பட்டது.

இந்த நிலையில் தற்போது மீன்பிடி குறைந்த நிலையில் காணப்படுவதனால் மீனவர்கள் தமது வருவாயை ஈட்டிக்கொள்வதில் பெரும் இன்னல்களை எதிர் நோக்கினர். இந்த நிலையில் தற்போது குறித்த அனுமதி கிடைத்துள்ளது.

இந்த நிலையில் தற்போது முள்ளிச்சங்கின் சதை அதிகரித்த விலையில் காணப்படுகின்றது. ஒரு கிலோ முள்ளிச்சங்கின் விலை 1500 ரூபாய் தொடக்கம் 2 ஆயிரம் ரூபாய் வரை செல்கின்றது.

இந்த நிலையில் தற்போது மன்னார் மாவட்ட மீனவர்கள் முள்ளிச் சங்கை எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது அதிகளவில் கடலட்டைகளும் பிடிக்கப்படுகின்றது. தற்போது மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டத்திற்கும், வெளிநாடுகளுக்கும் கடலட்டை மற்றும் முள்ளிச் சங்கின் சதை போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

முள்ளிச்சங்கை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு மட்டுமே அதிகளவில் பெற்றுக்கொள்ள முடியும் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கடற்படையினரால் வழங்கப்படும் பாஸ் நடைமுறை அமுலில் உள்ள போதும் மீனவர்கள் கடற்படையினரின் கெடுபிடிகள் அற்ற நிலையில் தொழிலுக்குச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# வீதி விபத்துக்கள், விலகுமா துயரங்கள்?

■ அலெக்ஸ் பரந்தாமன்
- புதுக்குடியிருப்பு -

சமீப காலமாக நாட்டின் பல்வேறு இடங்களிலும் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த மாத ஆரம்பத்தில் இயக்கச்சிப் பகுதியிலும் அதன் பின் நான்கு நாட்கள் கழிந்த நிலையில் இருபாலைப் பகுதியிலும் நடைபெற்ற கோர விபத்துச் சம்பவங்களில் குடும்பஸ்தர் மற்றும் வாகன சாரதி, சிறுவன் என்பவர்கள் பலியாகியுள்ளதோடு, வேறு பலர் படுகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த விடயங்களை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

வீதிகளில் நடைபெறும் இவ்விபத்துக்களுக்குரிய காரணங்கள் என்ன? அவை ஏன் ஏற்படுகின்றன? என்பது குறித்து பொதுமக்களில் பலர் பலவிதமான கருத்துக்களை முன்னுரைப்பதோடு, வேறு சிலர் ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்தும் மனப்பாங்கை வெளிப்படையாகவே காண்பித்தும் வருகின்றனர்.

விபத்துக்கள் என்பது திட்டமிட்டு நடத்தப்படுவதில்லை. அது தற்செயலாகவே ஏற்படுகின்றது. தற்போது நமது நாட்டின் வடபகுதியில் சாதாரண நிகழ்வாக மாறிக் கொண்டிருக்கும் வீதி விபத்துக்களானது, அவரவரது கவலையீனங்களாலும், தான் தோன்றித்தனமான செயற்பாடுகளினாலும் தான் ஏற்படுகின்றது... என்ற கருத்து பொதுமக்களின் நடுவே பரவலாக பகிரப்பட்டுக் கொண்டிருப்பது தெரியவருகின்றது.

வீதியொன்றில் பயணிக்கும் நபர் ஒருவர் தனது உயிர் மற்றும் உடைமை குறித்து மிக அவதானமாகப் பயணித்துக் கொண்டிருந்தாலும், அவர் எதிரிலோ அன்றி பின்புற நிலையில்இருந்தோ வரும் இன்னொருவாகன நபர், மேற்குறிப்பிட்ட நபரின் நலனில் அக்கறையின்றி தன்னிச்சையாக வாகனத்தைச் செலுத்த முற்படுவாரானால், அங்கு விபத்து நிகழ்வதற்கு ஏதுவாகின்றது.


அண்மையில் இயக்கச்சி மற்றும் இருபாலையில் நடைபெற்ற இக்கோர விபத்தின் மூலகாரணிகளை பொலிஸார் ஆராயுமிடத்து வாகனங்களுக்கிடையில் போட்டி மனப்பான்மை, முந்திச் செல்லும் நிலை மற்றும் கவனக் குறைபாடுகள் என்பன வெளிப்பாட்டிருப்பதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது. எனினும்,முறையான வாக்கு மூலங்கள் இன்னமும் வெளிப்படவில்லை என்பதேயதார்த்தமாகின்றது.

போர் நிகழ்ந்த காலங்களில் அரசாங்கம் வடபகுதி மீது பொருளாதாரத் தடை போட்டிக்கும் பொழுது இப்படியான விபத்துச் சம்பவங்கள் பெரும்பாலும் நடைபெறவில்லை. அதற்குரிய காரணமாகத் தென்படுவது வீதிகள் சீரில்லாமல் இருந்ததினால்தான் என்பது வெளிப்படையாகிறது. இப்படிச் சீரில்லாத வீதிகளில் எந்தவொரு வாகனங்களும் வேகமாக பயணிக்க முடியாத நிலை இருந்தது. வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளுக்கும் ஒரு நிதானம் இருந்தது. தாம் செலுத்தும் வாகனம் வீதிகளில் உள்ள பள்ளம்-திட்டிகளில் விழுந்து ஏறும் சமயம் பழுதாகிவிடும் என்ற அக்கறையில் சாரதிகளும் தங்களுக்குரிய வாகனங்களை மிக அவதானமாகவே செலுத்தினார்கள்.

ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. போர் ஓய்ந்துவிட்ட பிற்பாடு புனரமைப்புப் பணிகளூடாக வீதிகள் எல்லாம் திருத்தப்பட்டு காபெற் இடப்பட்ட பின்பு, இவ்வீதிகளில் அலுங்காமல், குலுங்காமல் செல்லும் வாகனத்தின் வேகம் அதனைச் செலுத்தும் சாரதிகளுக்கு கூடத் தெரிவதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுமக்களால் முன்வைக்கப்படுகிறது. குற்றச்சாட்டானது வாகன சாரதிகளின் பக்கம் திரும்புகின்றபோதிலும், வீதிகளில் ஏற்படும் விபத்துக்களுக்கான முழுப் பொறுப்பும் அவர்களுக்கானதல்ல.

போரின் பின்பு இன்றைய நாட்களில் வீதிகளில் சன நடமாட்டம் மட்டுமல்ல, வாகன அதிகரிப்பும் நெரிசல்களும் மிகுந்ததாகவே காணப்படுகின்றன. இந்நிலையில், வீதிகளில் செல்லும் வாகன சாரதிகளுக்கு பொதுமக்கள் மீதான நலனில் எவ்வளவு அக்கறை வேண்டப்படுகின்றதோ, அதே மாதிரியான அக்கறை வீதிகளில் பயணிக்கும் மக்களும் ஒதுங்கிச் செல்லுதல், நின்று நிதானித்தல், தேவையற்ற வேகத்தைக் குறைத்தல் போன்றவை செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

> **ஷெல் வீச்சுக்கள், கிபிர் குண்டுத் தாக்குதல்களில் உயிர்கள் காவு கொள்ளப்பட்டவை போன்று வீதி விபத்துக்களில் மக்கள் இறந்துபோவதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது. காரணம் - போர் நடைபெற்ற நாட்களில் தப்பிப்பிழைத்து வந்த ஒருவர், இப்பொழுது வீதியில் இன்னொரு நபரின் கவனக்குறைவால் உயிரிழப்பதென்பது சம்பந்தப்பட்ட நபரின் குடும்பத்தை பெரிதும் உளவியற் தாக்கத்துக்குள் உட்படுத்தும் என்பது நிச்சயமாகிறது.**




அதுவும் தற்போது வீதிகள் அகலிக்கப்பட்டு புனரமைக்கும் பணியில் கனகர வாகனங்கள் மற்றும் உருளைகள், பாரம் தூக்கிகள், பணியாளர்கள் என்பனவாய் வீதிகளில் நின்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், சமாந்தரமாக துவிச் சக்கர வண்டிகளில் பயணம் செய்தல், வீதிகளில் எதிரும் - புதிருமாக நின்று உரையாடுதல் போன்ற முற்று முழுதாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

கடந்த காலப் போர் அனர்த்தங்களின் பின், மக்கள் இழந்து நிற்பது கொஞ்சம் நஞ்சமல்ல. உடமை இழப்புக்களைவிட, உயிர் இழப்புக்களே அதிகமாகியுள்ளன. போரின் போது இழந்தவை போக, இப்போது நாடு போரற்ற நிலையில், வாகன சாரதிகள் சிலரின் செயற்பாடுகள் மற்றும் கவலையீனங்கள் என்பவற்றால் அவர்கள் மேலும், மேலும் உயிரிழப்பதை எந்தவகையில் நியாயப் படுத்த முடியும்? என்பதை அனைவரும் இங்கே கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ஷெல் வீச்சுக்கள், கிபிர் குண்டுத் தாக்குதல்களில் உயிர்கள் காவு கொள்ளப்பட்டவைபோன்று வீதி விபத்துக்களில் மக்கள் இறந்துபோவதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது. காரணம் - போர் நடைபெற்ற நாட்களில் தப்பிப்பிழைத்து வந்த ஒருவர், இப்பொழுது வீதியில் இன்னொரு நபரின் கவனக்குறைவால் உயிரிழப்பதென்பது சம்பந்தப்பட்ட நபரின் குடும்பத்தை பெரிதும் உளவியற் தாக்கத்துக்குள் உட்படுத்தும் என்பது நிச்சயமாகிறது.

அத்தோடு, பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதன் காரணமாக வடபகுதிக்கு வந்து குவியும் வாகனங்களின் எண்ணிக்கையையும் அதன் வடிவமைப்பின் அழகையும் கண்டு பலரிடையே தாமும் வாகன சாரதியாக வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. இந்நிலையில், இவர்களின் எண்ணங்களுக்குத் தீனிபோடும் முகமாக தனியார் சாரதி பயிற்சி நிலையங்களும் தோன்றியவண்ணமுள்ளன.

இந்நிலையங்களில் சாரதி பயிற்சி பெற்று, வெளியே வருபவர்கள் பூரணமான தகைமைகளுடன்தான் வெளியேறுகிறார்களா? என்பது ஆய்வு செய்யப்படவேண்டிய விடயமாகும். ஏனெனில், 'சாரதி பயிற்சி நிலையம்' என்ற பெயரில் சில தனிநபர்கள் பணத்துக்காக அரைகுறைப் பயிற்சியுடன் அனுமதிப் பத்திரம் வழங்குவதாக சாட்டப்படும் குற்றம், பொதுமக்கள் மத்தியில் நிலவி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இது தவிர, இயக்கச்சி, வீதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகவும், இதற்குக் காரணம் சந்தியில் உள்ள வளைவான வீதியே காரணமெனவும், இதனால், இவ் வளைவை நேராக்குவதற்கு தனியாரிடம் இருந்து 1200 சதுர அடிக் காணியைப் பெற்றுத் தருமாறு யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவிடம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிகிறது.

இதில் நகைமுரண் என்னவெனில், வீதி வளைவென்பது இயக்கச்சி சந்தியில் மட்டும்தான் அமைந்துள்ளது என்பதல்ல. அத்தோடு, வீதி விபத்துக்களும் இயக்கச்சியில் மட்டும்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன அல்ல. யாழ். கச்சேரிக்கு முன்பாக உள்ள வீதிவளைவிற்கு நடுவாக சிமெந்து அணை கட்டி, வாகனங்கள் போவதற்கு ஒரு வழியாகவும், வருவதற்கு இன்னொரு வழியாகவும் இலகுபடுத்தப்பட்டுள்ளது போன்று இயக்கச்சி மற்றும் பிற இடங்களில் உள்ள வளைவுகளும் இருவழிப்பாதைகளாக அமையவேண்டும். அப்படி அமையுமிடத்து இந்த விபத்துக்களை வீதிகளில் பெருமளவு தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதேவேளை, காரணமின்றி அதிவேகத்தில் பயணிக்கும் வாகனங்களைப் போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் கவனத்தில்கொள்ளல் வேண்டும். குறிப்பாக, தனியார் பேருந்துகள் அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றிய நிலையில், போட்டி போட்டு ஓடுவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதோடு, நீதிமன்றங்களும் இப்படியான செயற்பாடுகள் உறுதியெனத் தெரியுமிடத்து இறுக்கமான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் வீதியில் ஏற்படும் அநாவசியமான உயிரிழப்புக்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

இதுவரை வீதிகளில் நடைபெற்ற கோர விபத்துச் சம்பவங்களின் பின்பும், புரிந்துணர்வற்ற நிலையில் மீண்டும் இப்படியான விபத்துக்கள் நிகழ்வதற்கேதுவான செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொதுமக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையெனில், பொலிஸ் மற்றும் நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதே வீதிகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்கான ஒரே ஒரு வழிமுறையாகும்.

# மரண தண்டனைக் கைதிகள்; தீர்மானம் எடுப்பார் ஜனாதிபதி



(கொழும்பு)

மரண தண்டனைக் கைதிகள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானிப்பார் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பிலான அறிக்கையொன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மரண தண்டனைக்கைதிகள் தொடர்பில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஏற்கனவே அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கை ஆராயப்பட்டு வருவதாகவும், விரைவில் மரண தண்டனைக் கைதிகள் தொடர்பில் விரிவான அறிக்கையொன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டின் பின்னர் 200இற்கும் மேற்பட்டோருக்கு மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மரண தண்டனைக் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார் என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# குரோதத்துடன் செயற்படும் அரசு குற்றம் சாட்டும் புபுது ஜாகொட

(கொழும்பு)

அரசாங்கம் பீதியுடனும் குரோதத்துடனும் செயற்பட்டு வருவதாக முன்னணி சோசலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

மாற்று அரசியல் கருத்துடையவர்களை அடக்கி ஒடுக்க அரசாங்கம் முயற்சி செய்கின்றது. சம்பூர் காணி உரிமையாளர்களை இடம்பெயர் முகாம்களில் தங்க வைத்து, அந்தக் காணிகள் இந்திய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

எமது கட்சியின் லலித் குமாரே இதற்காக குரல் கொடுத்தார். வடக்கில் இராணுவ மயக்கமாலுக்கு எதிராக குரல் கொடுத்தார்.

லலித் குமார் மற்றும் குகன் ஆகியோர் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ மயமாக்கல்களுக்கு எதிராக குரல் கொடுத்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் காணிகள் சிங்களவர்களுக்கு வழங்கப்பட உள்ளதாக இனவாத அடிப்படையில் செயற்பட்டது.

லலித், குகன் போன்றோரின் போராட்டம் ஆளும் கட்சிக்கு மட்டுமன்றி இனவாத அரசியலை நடாத்தும் பிரபுக்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தியது. வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தெற்கு மக்களை குரல் கொடுக்கச் செய்ய லலித், குகன் போன்றோர் முயற்சி செய்தனர்.

இதனை தாங்கிக்கொள்ள முடியாத அரசாங்கம் அவர்களை ஒடுக்குவதற்கு முயற்சித்தது. லலித், குகன் கடத்தப்பட்ட சம்பவம் தைரியமான செயல் அல்ல. இது ஓர் கோழைத்தனமான முயற்சியாகும்.

லலித், குகன் ஆகியோரை அரசாங்கம் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் தடுத்து வைத்திருப்பதாகவே நாம் நம்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். லலித் குகனை விடுதலை செய்வது தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

# தேர்தல் சட்டத்திருத்தப்பொறியில் எதிர்க்கட்சிகள் சிக்கக் கூடாது

## - எச்சரிக்கிறார் ஹரின் பெர்னாண்டோ



(கொழும்பு)


தேர்தல் சட்டத் திருத்தம தொடர்பான அரசாங்கத்தின் சூழ்ச்சிப் பொறியில் எதிர்க்கட்சிகள் சிக்கி விடக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். தற்போது அமுலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் இணங்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஆட்சி முறைமையை ஜனாதிபதி கைவிடும் வரையில் இந்தத் தேர்தல் சட்டத் திருத்தங்களுக்கு ஆதரவளிக்கக் கூடாது என அவர தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், தேர்தல் திருத்தச் சட்டங்களின் பிரதான ஏதுக்களில் ஒன்று என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தல் திருத்தச் சட்டங்களை அமுல்படுத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தச் சதி வலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை சிக்கி விடக் கூடாது என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வீண் விரயம் மற்றும் ஊழல் மோசடிகளின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. தேர்தல் சட்டத்திற்கு ஆதரவளிக்கும் கட்சியின் தீர்மானத்தை கட்சித் தலைமை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென ஹரீன் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்

# கணக்கிலெடுக்காத அரசு குமுறுகிறது ஹெல உறுமய



(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் தாம் அரசாங்கத்திற்கு தேவையாக இருந்த போதும், தற்போது அரசாங்கம் தம்மை கவனத்தில் ஏடுக்காத நிலை ஏற்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

தாம் வெளியிட்டு வரும் கொள்கைகளை கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளும் இடம்பெறுவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் நிலவும் சிறுநீரக நோய் தொடர்பாக இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரத்ன தேரர் அரசாங்கத்தில் இருந்த போதும், அரசாங்கத்திற்கு 3 இல் 2 அதிகாரம் இருக்கின்றது.

முன்னர் என்றால் ரத்ன தேரரின் வாக்கு பலம் அரசாங்கத்திற்கு பலமாக இருந்தது.

விடுதலைப்புலிகளை முறியடிக்கும் நடவடிக்கையின் போது, ரத்ன தேரர் எதிர்க்கட்சிக்கு சென்றிருந்தால், அரசாங்கத்தால் அவர்களுக்கு எதிராக போராடி இருக்க முடியாது.

அப்போது, அரசாங்கம் எம்மீது அச்சத்துடன் செயற்பட்டது, ஆனால், இப்போது எங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி சட்டத்தரணிகளாக 21 பேர் நியமனம் பெற்றனர்



ஜனாதிபதி சட்டத்தரணிகளாக 21 பேர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கையளித்தார்.

எம்.சித்தம்பலம்- துலிந்த வீரசூரிய- லஷ்மன் பெரேரா- ரொனால்ட் சீ. பெரேரா- பிரசாந்த லால் டி அல்விஸ்- நிஹால ஜயவரத்ன- சமில் ஜே. பெரேரா- குஷான் டி அல்விஸ்- காலிங்க என். இந்திரதிஸ்ஸ- சானங்க ரணசிங்க- ஹர்ஷ அமரசேகர- நளின் லத்துவஹெட்டி- மைத்திரி எவான் விக்ரமசிங்க- பிரியந்த ஜயவர்த்தன- பிரசந்த சுஜீவ ஜயவர்த்தன- சந்தன லியன பட்டபெந்தி- உதித பிரியங்க எகலகேவா- சஞ்சீவ பிரனித் ஜயவர்தன- பைஸர் முஸ்தபா- குவேரா டி சொய்சா மற்றும் எம்.யூ.எம்.அலி சப்றி ஆகியோரே ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாவர்

# மனித உரிமை ஆணைக்குழு மரணதண்டனையை எதிர்க்கும்

## ஆணையாளர் மஹாநாம தெரிவிப்பு



எதிர்காலத்தில் மரண தண்டனை அமுலுக்கு கொண்டு வரப்பட்டால், அது புலம்பெயர் தமிழர்களுக்கு பிராணவாயு கொடுததைப் போலாகும் என இலங்கை மனித உரிமை ஆண்ணயாளர் சட்டத்தரணி பிரதீபா மஹாநாம தெரிவித்துள்ளார்.

இந்த ஒக்ரோபர், நவம்பர், அடுத்த மார்ச் மாதங்களில் நடைபெறும் ஜெனிவா மனித உரிமை பேர்வையின் கூட்டங்களின் பேர்து, இந்த நிலைமையானது நர்ட்டுக்குப்பாதிப்பாக அமையக் கூடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு, இன்னும் தண்டனைகள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு தண்டனை வழங்குவது, மரண தண்டனை விதிப்பது போன்றவற்றை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை வந்து கண்காணித்து, ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கும் அறிக்கைக்கு இது உந்து சக்தியாக அமைந்து விடும்.

இந்த நிலைமையில் மரண தண்டனை விதிப்பது சரியான செயற்பாடாக இருக்காது. நாட்டில் குற்றச் செயல்களைக் குறைக்க உள்நாட்டில் சட்டத்தை வலுப்படுத்தி, அதனை சமூகமயப்படுத்த வேண்டும் எனவும் மரண தண்டனையை அமுல்படுத்துவதை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கடுமையாக கண்டிக்கும் எனவும் மஹாநாம தெரிவித்துள்ளார்.

# புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானபாகங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானபாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு லயன் எயார் பயணிகள் விமானமொன்றை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருந்தனர். இந்தப் பயணிகள் விமானத்தில் பயணம் செய்த 48 பயணிகளும், விமானி உள்ளிட்ட ஏழு விமான சிப்பந்திகளும் உயிரிழந்தனர்.

கடலில் வீழ்ந்த இந்த விமானத்தை மீட்கும் பணிகளை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர். விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவல்களுக்கு அமைய இந்த விமானத்தை கண்டு பிடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விமானத்தின் பாகங்களை மீட்கும் பணிகளை கடற்படையினர் ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர்.

இரணை தீவு கடற்பகுதியில் இந்த விமான்ம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. சுழியோடிகள் குறித்த பிரதேசத்தில் தற்போது ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இன்னும் சில வாரங்களில் விமானத்தின் பாகங்களை மீட்க முடியும் என கடற்படையினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மிக நெருங்கிய சகாக்களில் ஒருவரான கடாபி என்பவரே இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்த உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2009ம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது கடாபி உயிரிழந்துள்ளார்

# உளநல பாதிப்புக்களை தடுக்க

# மகிழ்ச்சியான சூழல் உருவாகவேண்டும்

## – உளநல மருத்துவர் டாக்டர் எஸ்.சிவதாஸ் –

(வவுனியா)

இத்தனை அழிவுகளுக்குப் பின்னர் நாம் நிமிர வேண்டுமாக இருந்தால், மீண்டு எழ வேண்டுமாக இருந்தால் எமது எதிர்காலச் சந்ததி திடமானதாகவும் மகிழ்ச்சியானதுமான பிள்ளைகளாக உருவாக்கப்பட வேண்டும் என வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாஸ் தெரிவித்தார்.


விரும்பத்தக்க மனிதராய் நம்மை நாமே செதுக்குவோம் எனும் தொனிப்பொருளில் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேச உளநல தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள் மனச்சோர்வுக்கு உள்ளாகுவது மிகக் குறைவு. ஏனெனில் காலையில் இருந்து புன்னகையுடனும் குதூகலத்துடனும் துடிப்புடனும் இருக்கும் பிள்ளைகளுடன் பணியாற்றுபவர்களுக்கு மனச்சோர்வு உருவாகுவது .மிகக்குறைவாகும். சில சூழ்நிலைகளில் ஒரு வகுப்பில் 30 முதல் 40 மாணவர்களைச் சேர்த்து நெருக்கடியை உருவாக்கி விடுவார்கள் ஆனால் பொதுவாகப் பார்த்தால் சந்தோசமான தொழில் ஆசிரியத்தொழில். அவ்வாறு பார்க்கும் போது மனச்சோர்வு ஏற்படுவது குறைவாகும். மனச்சோர்வு இந்த உலகத்தில் அதிகரித்துச் செல்கின்றதா? அல்லது மிகைப்படுத்தப் படுகின்றதா? என்பது தொடர்பில் பார்க்கப்பட வேண்டியுள்ளது. பொதுவாக உளமருத்துவத்தில் உளச்சிதைவு நோயின் வீதம் அதிகரிக்கப்படவில்லை. அது உயிரியல் அடிப்படையைக் கொண்டது. எனவே உயிரியல் அடிப்படையைக் கொண்ட மனச்சிதைவு நோய் மாற்றமடையாது காணப்படுகின்றது. ஆனால் மனச் சோர்வு அதிகரித்துச் செல்வதாக கூறப்படுகின்றது. மனச்சோர்வு என்றால் என்ன என்று பார்க்க வேண்டிய தேவையுள்ளது. மனச்சோர்வு என்பது மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு அங்கம் ஆகும்.

மனப்பிரச்சினையுள்ளவர்கள் அதனை உடல் பிரச்சனையாக அடையாளப்படுத்தி வருகின்றனர். அதனை நோயின் அறிகுறியாக உருவாக்கிக் கொள்கின்றார்கள். இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் சந்தோசமாக வாழுதல் என்பது அவர்களது நிகழ்ச்சி நிரலில் இல்லை. பெற்றோர்களும் அவர்களது வாழ்வில் அதனை இணைப்பதற்கு முயற்சிப்பதில்லை. பிள்ளைகளை சிறு வயதில் இருந்தே திடமாகவும் மகிழ்ச்சியாகவும் வளர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார். (160)

# பரமர் சங்கமம்



'ஆயிரம் வேரைக் கண்டவன் அரைப்பரியாரி' இதுவே சிறிய மாற்றத்துடன் 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைப்பரியாரி' எனச் சொல்லப்படுவதும் உண்டு.

எப்படியோ வேரையோ, பேரையோ ஆயிரம் கொன்றால் கூட முழு வைத்தியனாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை எண்டது சிந்திக்க வேண்டியதாகும்.

சமீபத்தில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடந்து முடிந்துள்ள உலகக்கிண்ண ரி20 இறுதிப்போட்டி நாளில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரைத் தாக்கியதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

இத்தகைய நிகழ்வுகள் அதுவும் நமது நாட்டுக்குப் புதிதான ஒன்றில்லை. அதிகாரத்துஷ்பிரயோகம் என்பது சாதாரண பாடசாலை மட்டத்தில் இருந்து பாராளுமன்றம் வரை நடைபெற்றுக் கொண்டிருப்பதை பல்நூற்றாண்டு விழாவாக அனுட்டிக்கலாம்.

கின்னஸ் சாதனையாகப் பதியப்படுவது மட்டும் அதற்குத் தரக்குறைவை ஏற்படுத்தும் என்பதால் இப்பொழுதுதான் எல்லாவற்றுக்கும் சர்வதேசத்தினங்கள் சேர்க்கப்பட்டுள்ளதல்லவா?

வருடம் முன்னூற்று அறுபத்தைந்து தினங்களும் ஏதாவதொன்றுக்குச் சர்வதேச தினமாக எதிர்காலத்தில் திகழப்போவது இப்பொழுதே தூரதிருஷ்டியில் தெரிகிறது.

ஆகவே சர்வதேச துஷ்பிரயோக தினம் என்றொன்றும் இன்னமும் பத்து இருபது வருடங்களுக்கு உள்ளாக வந்து விட்டதாலும் அதிசயப் பட ஒன்றுமில்லை.

பிரதிப்பொலிஸ் மா அதிபர் அன்றைய தினம் சில நண்பர்களை தன்னுடைய செல்வாக்கைப்பயன்படுத்தி உள்ளே அழைத்துச் செல்ல முனைந்துள்ளார்.

கடமையில் இருந்த பொலிஸ் அத்தியட்சகர் அதனைத் தடுக்க முயன்றது மேலதிகரியான பிரதிப் பொலிஸ் மா அதிபரை அவகௌரவப்படுத்துகின்ற நிகழ்வாக மாறிவிட்டது. ஆத்திரம் அடைந்த அவர் பொலிஸ் அத்தியட்சகரைத் தாக்கியுள்ளார்.

இது இப்போ பெரிய அளவில் உருவேறி விசாரணை நடத்தப்படுமளவுக்கு காரணமானது. அந் நேரம் சுற்றி நின்ற பார்வையாளர் கூட்டந்தான்.

பொது நிர்வாகத்துறைகளில் அதிகாரிகளாக விளங்குபவர்களே இவ்விதம் துஷ்பிரயோக செயற்பாடுகளில் இறங்கி விட்டால் கீழ் மட்டத்தினரைப் பார்க்கவா வேண்டும்?

அந்நாட்களில் இலஞ்சம் வழங்கி கள்ளக்கடத்தல் நடத்தியவர்கள் 25 ஆயிரத்துக்கும், 50 ஆயிரத்துக்கும் விலை க்கு வாங்க முயன்றபோதெல்லாம் அதே தொகை பணத்தை உனக்குத் தருகிறேன் இந்த ஈனத்தொழிலை விட்டு விடு எனக் கேட்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் அலங்கரித்த பதவிகள் இவை.

25 ஆயிரம், 50 ஆயிரம் முப்பது வருடங்களுக்கு முன்பாக இப்போதைய இலட்சங்களைக் குறிக்கும் என்பதும் சிந்தனைக்கு எடுக்க வேண்டும். அவ்விதம் தங்கள் முன்பாக வெட்டப்படுகின்ற படுகுழிகளை நிரப்பிக் கொண்டு எழுந்தனர்.

ஆயிரங்கள் வருவதும் போவதும் துஷ்பிரயோகத்துக்கு தூசியாக இருக்கலாம். இத்தகைய அதிகாரிகள் ஆயிரத்தில் ஒருவராக இருக்கையில் தானே உத்தியோகத்துக்குக் கௌரவம் இல்லை பின்னை சொல்லுங்கோ பாப்பம்....

# நிர்வாக சபைக் கூட்டம்

(திருநெல்வேலி)


கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலய நிர்வாக சபைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (138)

# தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று புரட்டாதி இறுதிச் சனி வார உற்சவத்தை முன்னிட்டு மாலை 7.00 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் 'புரட்டாதிச் சனி விரதமகிமை' என்ற தலைப்பில் தெய்வீகப் பேருரை ஆற்றவுள்ளார்.



யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் உளநல தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சோதிநாதன், கல்லூரி அதிபர், மற்றும் ஆசிரியர்கள் பார்வையிடுவதைக் காணலாம். (105)

# நடமாடும் சேவை

(திருநெல்வேலி)

கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் வேவையொன்று பிரதேச செயலக மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

காணி அபிவிருத்தி மற்றும் காணி நிர்வாக அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படவிருக்கும் இந்நடமாடும் சேவையில் மக்கள் தமது காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சுமுகமான பிரச்சினை பெற்றுக் கொள்ள முடியும் எனக் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (137)

# முரசின் இன்றைய பலன்

(13.10.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 27 ஆம் திகதி. நட்சத்திரம் பூரம்.
சித்தயோகம். முற்பகல் 11.55 வரை. திதி திரயோதசி முன்னிரவு 9.47 வரை.
இராகுகாலம் 9.02 - 10.32 வரை. சுபநேரம் 03.02 - 04.32 வரை.
எமகண்டம் 1.32 -.03.02 வரை, குளிகன் காலம் 06.02 - 7.32 வரை.
பிரதோஷ விரதம்

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது**

| | |
|---|---|
| மேடம் | எதிலும் வெற்றி. பெற்றோரின் விருப்பம் நிறைவேறும். பொது காரியங்களில் ஈடுபாடு. உங்கள் பேச்சு எடுபடும். புதிய முயற்சிகள் சிறக்கும். குடும்ப மகிழ்வு. |
| ரிஷபம் | அனுபவ அறிவுக்குப் பலன். உடன்பிறந்தோர் உதவி. தொழில் சிறக்கும். இலாபம் புரளும். பிள்ளைகளில் நல்ல மாற்றம். சேமிப்பு மிகும். |
| மிதுனம் | சோர்வு, கோபம் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி. உயர்ந்தோர் நட்பு. மதிப்பு மிகும். நின்ற வேலைகள் முடியும். உறவினர் உதவி. புது ஒப்பந்தம். |
| கடகம் | சாதிக்கும் எண்ணம். உறவினர், நண்பர்கள் ஆதரவு. வீடு, வாகன திருத்தம். தொழில் பெருகும். திறமை வெளிப்பட வாய்ப்பு. எதிர்ப்புகள் அடங்கும். |
| சிம்மம் | சுற்றுச்சூழ்நிலை அறிந்து செயற்படுக. பயம் தவிர்க்க பக்தி. தொழிலில் புதிய யுக்தி. அளவான பணவரவு. கடன் பெற நேரும். சேமிப்பு கரையும். |
| கன்னி | அலைச்சல். பிள்ளைகளால் பதட்டம். கடின உழைப்புக்கு இலாபம். விவாதம் வேண்டாம். எதிர்கால சிந்தனை. புதிய திட்டங்கள். பிரச்சினைகள் தீரும். |
| துலாம் | வேலைச்சுமை. குடும்பத்தில் சிக்கல். வளைந்து கொடுங்கள். கோபத்தால் இழப்பு. தொழில் நெருக்கடிகள் வந்து நீங்கும். வெளியூர் செய்தி மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | சவாலான வேலைகள் முடிப்பீர்கள். சகோதர ஒற்றுமை. சுபநிகழ்ச்சி திட்டம். வாகன திருத்தம். வேலை விஷயத்தில் முக்கிய முடிவுகள். |
| தனுசு | தம்பதியர் பிரச்சினை நீங்கும். பணம் கைக்கு வரும். தொழிலில் புதிய தந்திரங்கள். சக ஊழியர் ஆதரவு. பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிவீர்கள். |
| மகரம் | எதிர்பாராத செலவு. வீண்பழி வரும். போட்டிகள் இருக்கும். பொறுமையால் வெல்க. வேலைச்சுமை. யாரிடமும் குறை வேண்டாம். தாயாருடன் விவாதம். |
| கும்பம் | அவசரப்பணி வரும். அக்கறையுடன் செய்வீர்கள். அளவான பணவரவு. கடன். சச்சரவுகளில் விலகுக. தொழிலில் அதிரடி மாற்றம். பிள்ளைகளின் உயர்வு. |
| மீனம் | பணப்புழக்கம். உறவினர்கள், நண்பர்களுக்கு உதவி. வழக்கில் திருப்பம். அரசால் அனுகூலம். முயற்சிகள் பலிதமாகும். பணியில் சுமுகம். குடும்பத்தில் நிம்மதி. |

# நான் ரெடி



(புதுடில்லி)

இந்திய அணியின் தலைமைத்துவம் எனக்கு வழங் கப்படுமனால் அதனை ஏற்கத் தயாராக உள்ளதாக இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் விராட் ஹோலி இந்திய ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

நான் கடினமாக உழைத்து வருகிறேன். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் விளையாடுவது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

அணித் தலைவர் டோனியுடன் சிறந்த நட்பு இருக்கிறது. எமது அணி ருவெண்ரி-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து தலைமைத்துவத்தை ஏற்பது தொடர் பில் பலர் பேசு கிறார்கள். இப்போதைக்கு அணித் தலைமையை ஏற்பது குறித்து நான் சிந்திக்கவில்லை. எனது துடுப்பாட்டத் திறனை அதிகரிப்பது தொடர்பிலேயே அக்கறை செலுத்துகிறேன்.

அணித் தலைமைப் பதவி வழங்கப்படுமானால் அதனை ஏற்பதற்குத் தயாராகவே இருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# கப்டன் பதவிக்கு வேண்டாம் அவசரம்

கப்டன் பதவிக்கு விராட் ஹோலி அவசரப்படக்கூடாது என பாகிஸ்தான் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் அறிவுரை கூறியுள்ளார். இளம் வீரரான விராட் ஹோலி ருவெண்ரி- 20 போட்டிக்கான இந்திய அணியின் கப்டன் பதவிக்கு பொருத்தமானவர் என்றாலும் அவர் கப்டன் பதவி விடயத்தில் பொறுமை காக்க வேண்டும். கப்டன் பதவியை வகிக்க அவசரம் காட்டக்கூடாது. விராட் ஹோலி மிகவும் சிறந்த ஆட்டத் திறனுடன் இருக்கிறார். கடந்த 18 மாதங்களாக நிலையான சிறந்த துடுப் பாட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். விராட் ஹோலி தனது ஆட்டத்தை அனுப வித்து விளையாட வேண்டும். இந்தத் தருணத்தில் அவர் வேறு எந்தவித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அணித் தேர்வு விடயத்திலோ, முக்கிய முடிவு எடுக்கும் விவகாரத்திலோ ஈடுபட்டு சுமையைச் சுமக்காமல் இருக்க வேண்டும். ருவெண்ரி-20 உலக கோப்பை போட்டியில் இந்திய அணி தொடர்ந்து 3ஆவது முறை யாக அரை இறுதிக்கு முன்னேற முடியாமல் வெளியேறி இருக்கும் இந்த நிலையில் டோனியின் கப்டன் பணியின் திறமை குறித்து கேள்வி எழும்புவது எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை.டோனி சற்று இடைவெளி எடுத்து தனது கப்டன் பதவி செயற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். அவரது திறமை குறித்து மதிப்பிட அவரே தான் சிறந்த நீதிபதி. 3 வகையான ஆட்டத்திலும் அவர் கப்டனாக செயற்படுவது கூடுதல் சுமையாகும். டோனி ஏதாவது ஒரு வகையான ஆட்டத்தில் இருந்து தனது கப்டன் பதவியை ராஜினாமா செய்தால் அவர் தனது ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்த வாய்ப்புக் கிட்டும். டோனி குறுகிய ஓவர் ஆட்டங்களில் சிறந்த வீரர் மட்டுமின்றி, சிறப்பாக முடிக்க கூடியவரும் ஆவார். உலக கோப்பை போட்டியில் கம்பீர் சரியாக ஆடவில்லை. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கப்டனான கம்பீர் தெனனாபிரிக்காவில் நடைபெறும் சம்பியன்ஸ் லீக் போட்டியில் சிறந்த ஆட்டத் திறனுக்குத் திரும்புவார் என்று நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# தொடர்ந்தும் முதலிடம்

(ஷாங்காய்)

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முன்னேறிய சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் தர வரிசையில் முதல் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள ஷாங்காய் ரோலர்ஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டி சீனாவில் நடந்து வருகிறது.

இந்தப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), சக நாட்டு வீரர் ஸ்டானிஸ்லாஸ் வாங்ரிங்காவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பெடரர் 4-6, 7-6, 6-0 என்ற செட் கணக்கில் வாவ்ரிங்காவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இந்தப் போட்டியில் காலிறுதிக்கு முன்னேறினால் பெடரர், தர வரிசையில் முதலிடத்தில் நீடிக்க முடியும் என்ற நிலை இருந்தது. இந்த வெற்றியின் மூலம் பெடரர் ஒட்டுமொத்தமாக 300ஆவது வாரமாக முதல் இடத்தில் நீடிக்கிறார். பெடரர் வெற்றியால், சேர்பியா வீரர் ஜோகோவிச் முதல் இடத்தை எட்டும் முயற்சியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

மற்றொரு ஆட்டத்தில் உலகின் 2ஆம் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் 6-3, 6-3 என்ற நேர்செட்டில் ஸ்பெயின் வீரர் பெலிசியானா லோபோஸ்சை தோற்கடித்து காலிறுதிக்கு தகுதி பெற்றார். இன்னொரு ஆட்டத்தில் 3ஆம் நிலை வீரர் ஆண்டி முர்ரே (இங்கிலாந்து) 6-2, 6-2 என்ற நேர் செட்டில் உக்ரைன் வீரர் அலெக்சாண்டரைச் சாய்த்து காலிறுதிக்குள் நுழைந்தார்.



# சிறப்பான செயற்பாடு இல்லை வருத்தம் கொள்ளும் ரோகித்

(மும்பை)

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இன்னமும் சிறப்பாகச் செயற்பட முடியாமை உள்ளது எரிச்சலளிப்பதாக இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் அண்மைக்காலமாக ரோகித் சர்மாவின் இடம் கேள்விக்குட்படுத்தப்படும் நிலையில் அழுத்தத்திற்குள்ளாகியுள்ள வீரராக அவர் மாறியுள்ளார். குறிப்பாக ரோகித் சர்மாவிற்கு அளவுக்கதிகமான வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ரோகித் சர்மா, தனது ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் ஆட்டத் திறனை தனக்குக் கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.அத்தோடு ருவெண்ரி-20 போட்டிகளில் சிறப்பாக விளையா-டிவருவதன் காரணமாக அந்த ஆட்டத் திறனை ஒருநாள் சர்வதேசப் போட்டி களில் பயன்படுத்த விரும்புவதாகவும் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

தனது ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் தொடர்பாக ஒட்டுமொத்தமாக ஓரளவு திருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்த ரோகித் சர்மா, தான் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகவும், மூன்றாம், நான்காம், 7ஆம் இலக்கங்களில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியுள்ளதாகத் தெரிவித்தார். ஆகவே ஒரு நிலையான இடத்தில் தன்னால் துடுப்பெடுத்தாட முடிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.எனினும் தான் சிறப்பாகச் செயற்படாமைக்குக் காரணங்களைத் தெரிவிக்க விரும்பவில்லை எனத் தெரிவித்த அவர், ஒரு தொழில்முறை வீரராக அனைத்து இடங்களிலும் சிறப்பாக விளையாட வேண்டிய தேவையுள்ளதாகவும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

(டர்பன்)

அவுஸ்ரேலியாவிற்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வுள்ள தென்னா பிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பரில் இடம்பெறவுள்ள 3 டெஸ்ட் போட்டிகளுக்கான தென்னாபிரிக்க அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 9ஆம் திகதி முதலாவது டெஸ்ட் போட்டி பிறிஸ்பேணில் ஆரம்ப மாகிறது. தொடர்ந்து இரண்டாவது போட்டி நவம்பர் 22ஆம் திகதியும், மூன்றாவது டெஸ்ட் போட்டி நவம்பர் 30ஆம் திகதியும் நடைபெறவுள்ளதுடன் பயிற்சிப் போட்டி நவம்பர் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளது.


இங்கிலாந்துத் தொடரில் இணைக்கப் பட்டிருந்த வேகப்பந்து வீச்சாளர்களான மார்சன்ட் டீ லாங்க, லொன்வபோ சொற்சொபி, சகலதுறை வீரர் அல்பி மோர்கல் ஆகியோர் நீக்கப்பட்டு சகலதுறை வீரர் ரோறி கிளென்வெல்ட்ற் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் விக்கெட் காப்பாளராகச் செயற்பட்டு வந்த ஏபி.டி.வில்லியர்ஸ் முதுகு உபாதையில் சிக்கியுள்ளதன் காரண மாக அவருக்கு மேலதிகமாக விக்கெட் காப்பாளர் தமி சொலகிளி அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக சிலவேளைக-ளில் அவுஸ்ரேலியத் தொடரில் ஏபி.டி. வில்லியர்ஸ் விக்கெட் காப்பில் ஈடுபட மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

கிரேம் ஸ்மித் (அணித்தலைவர்), ஹசிம் அம்லா, ஏ.பி.டி.வில்லியர்ஸ், ஜே.பி.டுமினி, ப.்.ப் டு பிளெஸிஸ், இம் ரான் தாஹிர், ஜக்ஸ் கலிஸ், ரோறி கிளென்வெல்ட்ற், மோர்னி மோர்க்கல், அல்விரோ பீற்றர்சன், ரொபின் பீற்றர் சன், வேர்னன் பிலாந்தர், ஜக்ஸ் ருடோல்.்.ப், டேல் ஸ்ரெய்ன், தமி சொலக்கிளி.



# பீற்றர்சனுக்கு வரவேற்பு

(லண்டன்)

பீற்றர்சன் அணிக்குத் திரும்புவதில் எங் களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஒரு நாள் போட்டியில் அவருடன் விளையாடத் தயாராக இருக்கிறோம் என இங்கிலாந்து அணியின் ருவெண்ரி-20 கப்டன் ஸ்ருவொட் புரொட் தெரிவித்தார்.

பீற்றர்சன் அணிக்குத் திரும்புவதை ஆவலுடன் வரவேற்கிறோம். அவர் அணி யில் மீண்டும் இடம் பெறுவதை இங்கிலாந்து கிரிக்கெட் சபை தான் முடிவு செய்யவேண்டும். இந்தியா அல்லது நியூசிலாந்து தொடரில் பீற்றர்சன் உறுதியாக இடம் பெறுவார். அவர் வெளிப்படையான மனிதர் எனவும் அவர் தெரிவித்தார்.

# இங்கிலாந்து தொடரில் இடம் யுவராஜ்சிங் நம்பிக்கை

(புதுடில்லி)

துலிப் கோப்பை போட்டியானது இங்கி லாந்து டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கு என்னை தயார்படுத்திக் கொள்ளும் மிக முக்கியமான போட்டியாக நான் கருதுகிறேன். இந்த ஆட்டத்தில் நிலைத்து விளையாடி னால் இந்திய அணியின் டெஸ்ட் வீரர்கள் வரிசையில் 6ஆவது இடம் கிடைக்கும் என இந்தியாவின் அதிரடி வீரர் யுவராஜ்சிங் தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டிகளில் நீண்ட நேரம் விளையாடுவது எனக்கு சிரமமாக இருக்கும். ஆனால் கடைசி நேரம் என்னால் மைதானத்தில் நின்று ஆட முடியும் என்று நம்புகிறேன். சகல துறை வீரராக மாறும் நோக்கத்தில் பந்து வீச்சு பயிற்சியில் கடினமாக ஈடுபட்டு வருகி றேன் எனவும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் வாய்ப்புக் கேட்கிறார் பொண்டிங்

(சிட்னி)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், விளையாடத் தயாராக உள்ளதாக அவுஸ்ரேலிய வீரர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணியின் வெற்றிக் கப்டனாக மட்டு மல்லாமல், சிறந்த வீரராகவும் ஜொலித்தவர் ரிக்கி பொண் டிங். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட் டங்களுக்கு மேல் எடுத்துள்ள இவர், ஒருநாள் போட்டியில் இருந்து சமீபத்தில் ஓய்வை அறிவித்தார். டெஸ்ட் போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்தி வரும் இவர், கடை-சியாக ஏப்ரல் மாதம் மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையா-டினார். இதில் 146 ஓட்டங்கள் (ஒரு அரைச் சதம்) மட்டுமே எடுத்தார்.

இந்நிலையில் அடுத்த மாதம் அவுஸ்ரேலிய, தென்னா பிரிக்க அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொ-டரில் விளையாடவுள்ளன. இத்தொடருக்கான அவுஸ் ரேலிய அணி, விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதில் பொண் டிங்கிற்கு வாய்ப்பு கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது குறித்து பொண்டிங் குறிப்பிடுகையில்,மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குப் பின், அவுஸ்ரேலிய அணி எந்த ஒரு டெஸ்ட் போட்டி யிலும் விளையாடவில்லை. இதனால் கிடைத்த நீண்ட ஓய்வு, உடல் மற்றும் மனதளவில் புத்துணர்ச்சி அளித்துள்ளது. உடற்தகுதி மற்றும் ஆட்டத் திறனை தக்கவைத்துக் கொள்ள தின மும் காலை, மாலை இரண்டு முறை வலைப் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். உடல் எடை யைக் குறைத்து, சர்வதேச போட்டிகளில் விளை யாடக் கூடிய தகுதி பெற்றுள்ளேன். தென்னாபிரிக்கா வுக்கு எதிரான டெஸ்ட் தொடரை, ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் முழுத்திறமையை வெளிப்படுத்தி, அணி யின் வெற்றியில் பங்கு வகிக்கப் போராடுவேன். உலகின் முதல்நிலை டெஸ்ட் அணியான தென்னாபிரிக்காவை வீழ்த்துவது எளிதான காரியமல்ல. அணியின் வேகப்பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்ட வரிசை பலமாக உள்ளது. இவர் களுக்கு எதிராக திட்டமிட்டு விளையாடும் பட்சத்தில் வெற்றி பெறலாம். அவுஸ்ரேலிய அணியிலும் திறமை யான வீரர்கள் இருப்பதால், வெற்றியை எளிதாக விட்டுத்தரமாட்டோம் எனத் தெரிவித்தார்.





மாந்தை கிழக்கு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட வீர,வீராங்கனைகளுக்கான கரப்பந்தாட்ட பயிற்சிமுகாம் கடந்த வெள்ளி,சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் பாண்டியன்குளம் மகாவித்தியாலய மாதானத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சி முகாமில் ஐம்பதிற்கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் கலந்துகொண்டனர். பயிற்சிகளை மாந்தை கிழக்கு பிரதேச்செயலக விளையாட்டு உத்தியோகத்தர் போல்ராஜ், மற்றும் தயாளபாலன், சுதர்சன் ஆகியோர் வழங்கினர். இப்பயிற்சிமுகாமில் கலந்துகொண்ட வீர,வீராங்கனைகளுக்கு சீருடைகளும் வழங்கப்பட்டன. (93)

விளையாட்டுச் செய்திகள்

## நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி -20 பரிஸ், சென்றலைட்ஸ், சென்றல் வெற்றி

(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் ருவென்ரி–20 கிரிக்கெட் தொடரில் பரிஸ், சென்றலைட்ஸ், சென்றல் அணிகள் வெற்றிபெற்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி கிரிக்கெட் அணிகள் பங்குகொள்ளும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி–20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் ஜொனியன்ஸ், பரிஸ் அணிகள் மோதின.

ஜொனியன்ஸ் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிளமிங் 30, அன்புயன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வினோத் 2, கரிகரன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பரிஸ் அணி 17.3 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் துவாரகன் 23, வினோத் 19, கரிகரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விதுசன் 3, லவேந்திரா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பரிஸ் அணியின் கரிகரன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் அணியும் ஒல்கொட்ஸ் அணியும் மோதின. சென்றலைட்ஸ் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப்பெற்றது. இதில் ஜேம்ஸ் 49, எடின் 29, விதுசன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிரியலக்ஸன் 2, நிரோசன் 2,திலீபன் 2 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஒல்கொட்ஸ் அணி 17.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 115 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் திலீபன் 31, ஸ்ரீகுகன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் ஜேம்ஸ் தெரிவானார்.

மற்றுமொரு போட்டியில் கிறாஸ்கோப்பர்ஸ் அணியும் சென்றல் அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய சென்றல் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப்பெற்றது. இதில் ரஜீவ் 103, கலிஸ்ரன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பார்த்தீபன் 2, ஜனந்தன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 190 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ்கோப்பர்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கஜதீபன் 55, காந்தசீலன் 29, பார்த்தீபன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றொகான் 3 விக்கெட்டைக்கைப்பற்றினார். ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் ரஜீவ் தெரிவானார்.

(93)

## மாவட்ட தெரிவுப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டு அமைச்சும் இணைந்து தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களை இணைக்கும் முதற்கட்டப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் பிரதேச தெரிவு அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் இன்றும், நாளையும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன. (எஸ்பி.)

## ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து 50 ஆயிரம் வீரர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. நிறுவனத்தினால் ஜனாதிபதி தங்கக் கிண்ணம் சம்பியன்ஷிப் போட்டிகள் நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெறவுள்ளன. நாடெங்கிலும் இருந்து 50,000 இற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்குபற்றவுள்ள இந்த சுற்றுப் போட்டியானது, இந்நாட்டில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டு நிகழ்வுகளில் ஒன்றாகத் திகழும்.

இலங்கையின் மிகப்பெரிய தொலைபேசி சேவை வழங்குனரான டயலொக் ஆசி ஆட்டா பி.எல்.சி. நிறுவனமானது இந்த தேசிய மட்டத்திலான சுற்றுப் போட்டிக்கு அனுசரணை வழங்குவதற்கு தொடர்ச்சியாக எட்டாவது வருடமாகவும் முன்வந்துள்ளது. அதேநேரம், கடந்த இரு தசாப்தகாலமாக இலங்கையின் தேசிய விளையாட்டு நிகழ்வுகள் தொடர்பான நாட்காட்டியில் ஒரு அங்கமாக இச் சுற்றுப்போட்டி இடம்பிடித்துள்ளது.

இலங்கையின் கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படுகின்ற இப்போட்டி நிகழ்வு இரு மாத காலத்திற்கு இடம்பெறவுள்ளதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக 300 இற்கும் மேற்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகளை தம்பக்கம் கவர்ந்திழுக்கவுள்ளது. அதன்மூலம் அடுத்தடுத்ததர்க அந்த அணிகள் மாவட்ட மட்டத்திற்கும், இறுதியாக தேசியமட்ட போட்டிகளுக்கும் முன்னேறிச் செல்லக் கூடியதாக இருக்கும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சரும் இலங்கையின் கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவருமான டிலான் பெரேரா எம்.பி. கூறுகையில், கடந்த பல வருடங்களாக இலங்கையின் தேசிய விளையாட்டை மிகவுயர்ந்த மட்டங்களுக்கு முன்கொண்டு சென்றுள்ள இலங்கையின் கரப்பந்தாட்ட சம்மேளனமானது, எமது இளைஞர்களை அடிமட்டத்தில் விளையாட்டில் ஈடுபடச் செய்யும் வகையிலமைந்த பலம்பொருந்திய ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் கால் பதித்துள்ளது என்றார்.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்துடன் ஜனாதிபதி தங்கக்கிண்ண விருதுக்காய் நீண்ட கால பங்காளராய் இம்முறை எட்டாம் வருடமாகவும் கரம்கோர்த்திருக்கும் இந்தத் தருணமானது எமது தேசத்தின் தேசிய விளையாட்டின் முன்னேற்றம் மற்றும் நலனுக்காய் நாம் வழங்கும் அர்ப்பணிப்பை பறை சாற்றுகின்றது என்று டயலொக் ஆசி ஆட்டா பி.எல்.சி. தேசிய விற்பனைகள் பிரிவின் சிரேஷ்ட பொது முகாமையாளரான பிரதீப் கீர்த்திரத்ன தெரிவித்தார். இலங்கையின் இளைஞர்கள் சர்வதேச விளையாட்டுத் தளத்தில் பல முன்னேற்றங்களை கண்டு உயர்வதற்கு டயலொக் ஆசி ஆட்டாவானது அர்ப்பணிப்புள்ள பங்காளராய் விளங்குகின்றது. அதற்கு ஜனாதிபதி தங்கக்கிண்ணத் தொடரும் முக்கியமான படிக்கல்லாய் அமைகின்றது என்றும் அவர் கூறினார்.

2000 இற்கும் அதிகமான மிஷிணி மற்றும் 1200 இற்கும் அதிகமான தளமையங்கள் என தொடர்ச்சியாக அதிகரித்துவரும் தள மையங்களை கொண்டியங்கும் டயலொக் ஆசி ஆட்டா நிறுவனமானது இலங்கையின் மிகப் பெரிய கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குநராகவும் அதேநேரம், இலங்கையின் விளையாட்டுக்களுக்கான பெருமைமிகு அனுசரணையாளராகவும் திகழ்கின்றது.

## தேசிய மட்டத்திற்கு தகுதிபெற்றோர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய சதுரங்கப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேசிய சதுரங்கப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

நவம்பர் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான திறந்த போட்டி, ஆண், பெண் இருபாலருக்குமான திறந்த போட்டி என இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற இந்தத் தேசியப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள் ஒக்டோபர் 5,6,7ஆம் திகதிகளில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தச் சதுரங்கப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகளில் ஜொலிஸ்ரார் நைற் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் சென்றர் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன. பெண்களுக்கான திறந்த போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 1ஆம் இடத்தினையும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி 2ஆம் இடத்தினையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 3ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சி)

# எதிர்ப்புப் பேசிப் பேசி தாங்கள் மட்டுமே வாழ்ந்தார்கள் சமூகமோ அழிந்து சின்னா பின்னமாகி இருக்கிறது!

இந்த நாட்டிலே மாகாண சபை முறைமை என்பது இன்றல்ல, 24 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டது. இந்த மாகாணசபை உருவாக்கப்பட்டு 02 தசாப்த காலம், அப்படியே நின்றிருந்தது. 20 வருடங்களுக்குப் பின்னர் நாங்கள் பொறுப்பெடுத்து 04 வருடங்கள் இதை நடத்தினோம். அப்பொழுது யாருமே வாய் திறக்காமல் இருந்து விட்டு 60 வருடங்களாக, 70 வருடங்களாக ஏன் 100 வருடங்களாகக் கூட ஈழக் கனவிலே மிதந்தவர்கள். இவையெல்லாம் தேவையில்லை நாங்கள் ஈழத்தைத் தான் பெற்றுத் தருவோம், சமஸ்டியைத் தான் பெற்றுத் தருவோம், என்று சமஸ்டிக் கட்சியை ஆரம்பித்து வீட்டுச் சின்னத்திலே வந்தவர்கள் இன்று 24 வருடங்களுக்குப் பின்னர் குறைந்த பட்சம் கிராமப் பொருளாதாரத்தையாவது கொழும்பெடுக்கக் கூடாது எங்களுக்குள்ளே கொண்டு வாருங்கள் என்று எதிர்ப்புத் தெரிவிப்பது மிக விசித்திரமாக இருப்பதனை நான் அதிசயமான விடயமாகப் பார்க்கின்றேன்.

இவ்வளவு காலமாக இயங்காமல் கிடந்த நிர்வாகத்தை நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்து வந்து சுட்டிக் காட்டுகின்ற அளவுக்காவது உங்களுடைய அரசியல் நிலைப்பாட்டிலே மாற்றம் வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். எனக்கு முன்னர் பேசிய பல கௌரவ உறுப்பினர்கள் தண்ணீரை இட்டு வளர்க்கின்ற பயிரை, கண்ணீரையும், இரத்தத்தையும் இட்டு வளர்த்தார்கள் எனச் சொன்னார்கள்: நான் ஆச்சரியமாகப் பார்த்தேன், உள்ளே கவலைப்பட்டேன். ஏன்? பயிரை தண்ணீர் ஊற்றித்தான் வளர்க்க வேண்டும், அதற்குக் கண்ணீர் ஊற்றி வளர்க்க முடியாது, இரத்தம் ஊற்றி வளர்க்க முடியாது.

அது பாரதி பாடிய பாட்டு. இந்த மண்ணிலே நடந்த போராட்டங்கள், கண்ணீரோட்டங்கள், இரத்தக்களரிகள் போன்றவற்றை நீங்கள் தான் உருவாக்கினீர்கள். நீங்கள் சமஸ்டிக்கட்சி என்று சொல்லி இந்த நாட்டிலே சமஸ்டி பெற்றுத் தருவதாக உருவாக்கினீர்கள். எங்கே உங்களது சமஸ்டி? நீங்கள் 1957ஆம் ஆண்டு பண்டாவை கொண்டு வந்தீர்கள், பின்பு 1965ஆம் ஆண்டு மாவட்ட சபையைப் பொறுப்பேற்று டட்லியோடு சேர்ந்து இராஜதந்திரம் என்றீர்கள்.

நீங்கள் தான் கண்ணீரும், இரத்தமும் ஓடுவதற்கு களத்தை அமைத்தவர்கள். இந்த நாட்டிலே சிங்களவர்களுடனான போட்டியினை கடுமையாக அமுல்படுத்தி தமிழர்களாக ஒன்றுபட வேண்டும் என்று நீங்கள் தான் வாதத்தைக் கொண்டு வந்தீர்கள். அதன் பின்னரும் நீங்கள் கேட்ட சமஸ்டி அடிப்படையிலே குறைந்த பட்சம் பண்டா-செல்வா ஒப்பந்தத்திலே இருந்த அடிப்படைகளில் வந்ததுதான் 1987ஆம் ஆண்டு மாகாண சபை. இலங்கை இந்திய ஒப்பந்தத்திலே குறைந்த பட்சம் அதையாவது எடுத்துத்தர முடியுமா? என்று நீங்கள் துணிந்து குரல் கொடுக்காமல் இருந்து விட்டு அன்று அவர்கள் வரலாற்றில் எடுத்ததை நடத்தாமல் ஆக்கிவிட்டு இன்று உங்கள் நிலைமை என்ன? இன்றும் சர்வதேசம் பெற்றுத் தரும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் போய் இது காணாது, ஆளுநருடைய அதிகாரத்தைக் குறையுங்கள் என்று பேசுங்கள். அதை விட்டு விட்டு கிராமத்திலே நாங்கள் கத்தரிச்செடி வளர்ப்பதற்கும், மிளகாய்ச்செடி வளர்ப்பதற்கும் எங்களுடைய உற்பத்தியை அதிகரித்து, தேசிய உற்பத்தியை அதிகரித்து, வெளிநாட்டு சந்தை வாய்ப்பைப் பெறுவதற்கான எங்களது முயற்சியை, பொருளாதார வளர்ச்சியை தடுப்பதற்கு உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? உங்களிடம் என்ன திட்டம் இருக்கிறது? ஒன்றுமே கிடையாது.

கிழக்கு மண்ணைத் தமிழர்கள் ஆளவேண்டும் என்று கூறிக் கொண்டு இவ்வாறு வெளிநாட்டிலிருப்பவர்களின் பணங்களை வைத்துக் கொண்டு மக்களுக்கு ஒன்றும் செய்யாமல் அரசியல் செய்து உங்களுக்கான சபைத் தலைவர், மாகாணசபை உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் போன்ற பதவிகளை எடுப்பீர்களே தவிர கஷ்டப்பட்டு பட்டினி கிடக்கின்ற மக்கள் இன்றும் கூட உடுக்கத் துணியில்லாமல் அங்கே கீரைத் தோட்டங்களுக்குப் பணி செய்கின்ற இவ்வாறான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த என்ன திட்டம் இருக்கின்றது இந்தக் கட்சியிடம்? ஒன்றுமே இல்லாமல் மக்கள் தொடர்பான திட்டம் எதுவுமில்லாமல் ஏதாவது வந்தால் அதை எதிர்க்க வேண்டும். அவ்வளவுதான்.

உங்களுடைய பேச்சைக் கேட்டு நீங்கள் சமஸ்டி பெற்றுத் தருவீர்கள், இந்தியன் தருவான், அமெரிக்கன் தருவான் என்று உங்களுடன் நின்றிருந்தால் நாங்களும் முள்ளிவாய்க்காலிலே மரணித்திருப்போம். எங்களுடைய ஆவி என்று சொல்லி நீங்கள் என்னுடைய ஊரிலேயே போய் மாவீரன்




பிள்ளையான் பேசுகிறார், வாக்களியுங்கள் மக்களே என்று வாக்குக் கேட்டிருப்பீர்கள். பாவம் உங்களை நம்பி இறந்து போன மக்கள், ஒன்றுமே இல்லாமல் ஏழைகளாக இருக்கிறார்கள். இன்று முஸ்லிம்களைப் பற்றிப் பேசுகிறார்கள். பாவம் முஸ்லீம்கள் 1990ஆம் ஆண்டு வடபகுதியில் இருந்து விரட்டப்பட்ட பொழுது இந்தத் தமிழரசுக்கட்சி சம்பந்தரும் இருந்தார். யாரும் வாய் திறக்கவில்லை. கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்து ஜனநாயகம் பற்றிப் பேசுகிறார்கள், கூட்டாட்சி நடத்துகின்றார்கள்.

மக்களைக் குழப்புகின்ற, திசை திருப்புகின்ற, பழிவாங்குகின்ற உணர்வுகள் எல்லாம் எங்கிருந்தோ எடுக்கப்பட்டு பாவம் எங்கள் இனம் அழிக்கப்பட்டு, சின்னா பின்னமாக்கி; சிதைந்து, கூனிக் குறுகிப் போய் இருக்கிறது.

ஏனைய இனங்களையும் குழப்பி மீண்டும் கிழக்கைக் குழப்புவதற்கு நாங்கள் தயாரில்லை. அதற்காகத் தான் மக்கள் எங்களுக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். மக்களுடைய ஆணையில் நின்று கொண்டு இந்த மண்ணில் உண்மையான அமைதியையும், நிம்மதியையும் கொண்டு வருவதற்கு இந்த மக்களின் வறுமையையும், பட்டினியையும் நீக்குவதற்கு நாங்கள் கடைசி வரைக்கும் அரசாங்கத்தோடு கைகோர்த்துச் செயற்பட இருக்கின்றோம். அதை நாங்கள் செய்து காட்டுவோம்.

ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாங்கள் அரசாங்கத்தோடு இணைந்து சாதகமானவற்றைப் பேசி, எதிர்ப்பானவற்றை திருப்பி, இணக்கப்பாட்டோடு அரசோடு செய்து காட்டியிருக்கின்றோம். எங்களுடைய தமிழ் அரசியல்வாதிகள் இலங்கையில் சுதந்திரம் ஏற்பட்ட காலம் தொடக்கம் இன்று வரைக்கும் எதிர்ப்புப் பேசிப் பேசி தாங்கள் மட்டும் வாழ்ந்தார்களே தவிர சமூகம் அழிந்து சின்னா பின்னமாகியிருக்கின்றது.

## இதுவரை இப்படி நடித்ததில்லை!

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் விஜய், காஜல் அகர்வால் நடித்திருக்கும் துப்பாக்கி பட பாடல் வெளியீட்டு விழா கடந்த புதனன்று நடந்தது. அங்கு பேசிய விஜய்: நான் நடித்த படங்களிலேயே இது வித்தியாசமானது. இதுவரை இப்படி ஒரு படம் நடித்ததில்லை. வழக்கமான கிளைமாக்ஸாக இல்லாமல் இதில் புதுமையான ஒரு விஷயம் வைக்கப்பட்டுள்ளது. அது பேசப்படுவதாக இருக்கும். எனது படங்களில் பாய்ந்து பாய்ந்து சண்டை போடுவேன். இதில் யதார்த்தமான சண்டைக் காட்சிகளே உள்ளன. முருகதாஸ் என்னை ஹிந்திப் படத்தில் நடிக்க வைக்கப் போவதாகச் சொன்னார். அது அவர் ஆசை. ஆனால் எனக்கு ஹிந்தி மட்டுமல்ல, வேறு மொழியிலும் நடிக்கும் எண்ணம் இல்லை. எனக்கு தமிழ், தமிழ்தான். அது போதும் என்றார்.

இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் பேசியதாவது: விஜய்யின் இமேஜ் எனக்கு ரொம்ப பிடிக்கும். அவரிடம் பணியாற்றியபோது அவரது டைமிங் வசனம், காட்சியை மெருக்கேற்றும் விதம் பிடித்திருந்தது. இதில் ஹிந்தி, ஆங்கில வசனங்களும் பேசி இருக்கிறார். வடநாட்டுக்காரர்கள் பேசுவதுபோல் அவர் ஹிந்தி பேசியபோது அவரை வைத்து ஹிந்திப் படம் இயக்க வேண்டும் என்ற ஆசை தோன்றி இருக்கிறது. அது நிறை வேறும் என்று எண்ணுகிறேன். இப்படத்தில் 6 வருஷத்துக்கு பிறகு சொந்த குரலில் பாடி இருக்கிறார். இது ரசிகர்களுக்கு இராணுவ விருந்தாக இருக்கும். அவரது படங்களில் வருவது போல் தத்துவப் பாட்டு எதுவும் இதில் கிடையாது. தீபாவளிக்கு 3 நாள் முன்பாகவே இப்படத்தை வெளியிட உள்ளோம்.




## தமிழின் திசைக்கு வரவிரும்பாத சரிகா!



பல வருட அஞ்ஞாதவாசத்திற்குப் பிறகு, இப்போது "சொஸைட்டி" என்ற ஹிந்திப் படத்தில் நடித்து வருகிறார். ஆனால், அப்படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்க கேட்டபோது மறுத்துவிட்டார். அதேபோல் தமிழ் மற்றும் ஹிந்தியில் விக்ரம் நடிக்கும் "டேவிட்" என்ற படத்தில் 'அவரை நடிக்க இயக்குனர் பிஜய் நம்பியார் கேட்டபோதும், ஹிந்தியில் நடிக்க ஒப்புக் கொண்ட சரிகா அதன் தமிழ் ரீமேக்கில் நடிக்க மறுத்திருக்கிறார். சரிகா, கமல்ஹாசனை பிரிந்த பின் மும்பையில் வசித்து வருகிறார். இவரது மகள் ஸ்ருதி ஹாசன் தமிழ், ஹிந்தி, தெலுங்கு படங்களில் நடித்து வருகிறார். மற்றொரு மகள் அக்ஷரா உதவி இயக்குனராக பணியாற்றி வருகிறார். அவர்கள் தந்தை கமலுடனேயே இருந்துவருகிறார்கள். கமலைப் பிரிந்த பின் நடிக்க மறுத்துவந்த சரிகா, பின்னர் ஹிந்தியில் "பேஜா ..ப்ரை", "பர்சானியா" போன்ற படங்களில் நடித்தார். தமிழில் நடிப்பதை மட்டும் முற்றாக மறுத்து வருகிறார். "தமிழ் ரீமேக்கில் கோலிவுட் பிரபல ஹீரோயின் ஒருவர் நடிக்க உள்ளார். அவர் யார் என்பதை பிறகு அறிவிப்பேன்" என்று இயக்குனர் பிஜாய் கூறியுள்ளார்.

## இளைஞர் பிரதாப்!

உடல் வயதாகிவிட்டாலும் மனதளவில் இளமையாகவே இருக்கிறேன் என்கிறார் பிரதாப் போத்தன். இருபது வருட இடைவெளிக்குப் பிறகு மலையாளத்தில், "22 பீமேல் கோட்டயம்" என்ற படத்தில் நடித்துள்ளேன். ரீமா கல்லிங்கல், பகத் பாசில் போன்ற இன்றைய இளம் நடிகர்களுடன் நடிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆஷிக், லால் ஜோஷ், டி.வி. ராஜீவ் குமார் போன்ற இயக்குனர்களின் படங்களில் நடிக்கும்போது மகிழ்வாக உணர்கிறேன். உடலளவில் வயதாகிவிட்டாலும் மனதளவில் இளமையாகவே இருக்கிறேன். நான் இயக்கிய படங்களை பார்த்தால் அடுத்த காலகட்டத்து படமாகவே இருக்கும். அதனால் இன்றைய சினிமாவோடு நானும் ஒத்துப்போகிறேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு மலையாளத்தில் மறுபிரவேசமாகும்போது நெகட்டிவ் பாத்திரத்தில் ஏன் நடித்தீர்கள் என்கிறார்கள். நான் கேரக்டரைத்தான் பார்க்கிறேன். நல்லதா கெட்டதா என்பதை பார்ப்பதில்லை என்கிறார் பிரதாப்.







ஜேம்ஸ் பொண்ட் கதாநாயகனாக உருவாகி 50 ஆண்டு ஆனதையடுத்து சிறப்புக் கொண்டாட்டங்கள் கடந்த 05 ஆம் திகதி தொடங்கியது. உலகம் முழுவதும் இரசிகர்களை கிறங்கடித்த ஹொலிவுட் படங்களில், "ஜேம்ஸ்பொண்ட் 007" இற்கு தனி சிறப்பு உண்டு. எதற்கும் கலங்காத ஹீரோக்களின் ஸ்டைலும் பேச்சும் சாகசங்களும், ஹீரோயின்களின் கவர்ச்சியும் இந்தப் படங்களுக்கு என தனி இரசிகர்களை உலகம் முழுவதும் உருவாக்கியது. "ஜேம்ஸ்பொண்ட் 007" என்ற துப்பறிவாளர் பாத்திரம் பிரிட்டன் எழுத்தாளர் இயான் பிளெமிங்கின் நாவலில் இருந்து "டாக்டர் நோ" என்ற படத்தில் எடுத்தாளப்பட்டது. இதுதான் முதல் பொண்ட் படம். 1962ஆம் ஆண்டு ஒக்டோபர் 5ஆம் திகதி வெளியானது. இதுவரை 22 பொண்ட் படங்கள் வெளியாகி உள்ளன. இருபத்து மூன்றாவதாக, "ஸ்கை ஃபோல்" உருவாகி உள்ளது. வரும் 2[illegible]ஆம் திகதி இங்கிலாந்தில் இப்படம் வெளியிடப்படுகிறது.

பொண்ட் பாத்திரம் வெளியாகி ஐம்பது ஆண்டுகள் ஆனதை அடுத்து உலகம் முழுவதும் சிறப்பு கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமெரிக்காவில் ஒஸ்கார் அமைப்பு "மியூசிக் ஒ஼ஃப் பொண்ட் நைட்" என்ற நிகழ்ச்சியை 5 ஆம் திகதி பிரமாண்டமாக நடத்தியது. இங்கிலாந்தில் பொண்ட் படங்களில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஏலத்துக்கு விடப்பட்டன. பெல்ஜியம் மற்றும் தென்னாபிரிக்காவில் பொண்ட் பட ஹீரோ, ஹீரோயின்கள் போல உடை அணிந்துவர அலுவலகங்கள் தங்கள் ஊழியர்களை கேட்டுக்கொண்டிருந்தன. அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஒல்லாந்து, ஜப்பான், மெக்ஸிகோ, ரஷ்ய நாடுகளில் "சொல்லப்படாத 007 கதை" என்ற பெயரில் சிறப்பு விவரணப் படங்கள் திரையிடப்பட்டன.

இதுவரை ஜேம்ஸ்பொண்டாக நடித்தவர்கள்: **1.** ஷோன் கொனரி, **2.** ஜோர்ஜ் லாஜன்பி, **3.** ரோஜர் மூர், **4.** டிமோதி டால்டன், **5.** பியர்ஸ் பிராஸ்னன், **6.** டானியல் கிரேக். ஜேம்ஸ் பொண்ட்களுக்கு இணையாக அதன் ஹீரோயின்களும் பரபரப்பாகப் பேசப்பட்டவர்கள்தான். ஆனால், ஒவ்வொரு படத்திலும் மூன்று நான்கு ஹீரோயின்கள் என்பதால் பட்டியல் நீளம். அதில் குறிப்பிடத்தக்கவர்கள், முதல் பொண்ட் பட ஹீரோயின் உர்சுலா அண்ட்ரஸ், லூசியானா, டயானா ரிக், பார்பரா பாக், இவா க்ரீன் மற்றும் ஸ்கை ஃபோல் ஹீரோயின் நவோமி ஹாரிஸ்.




# பத்துப் பிள்ளை பெத்தவளுக்கு தலைப்பிள்ளைகாரி முக்கிக் காட்டினாளாம்!



கிறிஸ்துவுக்குப் பின் 1977ஆம் ஆண்டு. பொதுத்தேர்தல் ஒன்று இலங்கையில் வருகிறது. முதன்முதல் அந்தத் தேர்தலைத்தான் உலகம் பார்க்கத் தொடங்கியதாகவும் அதன் பிறகுவந்த ஒவ்வொரு தேர்தலையும் உலகம் பார்த்துவருவதாகவும் தமிழ்த்தலைவர்களும் தமிழ் ஊடகங்களும் கூறிவருவதனை வரலாற்றாசிரியர்கள் பதிவுசெய்துள்ளனர்.

மரம் பழுத்தால் வௌவால் வரும் என்பார்கள். ஆனால் 1977இல் வௌவால்களைக் கூட்டணி கூட்டி வந்தது. கூட்டணி அன்றைய சோவியத்யூனியனைச் சேர்ந்த சிலரை தமது அலுவலகத்திற்கு அழைத்துவந்தது. வந்தவர்கள் பலநாடுகளுக்குச் சென்று வந்த அனுபவசாலிகள். வந்தவர்கள் கூட்டணியின் அமைப்புபற்றியும் அதன் அங்கத்தவர் தொகை பற்றியும் கேட்கத்தொடங்கினார்கள். கூட்டணி தலைவர்கள், ஒருவரின் முகத்தைத் ஒருவர் பார்த்தார்கள். ஒருவாறு கூட்டம் முடிந்தது.


"இது என்னடா! அமைப்பு என்கிறாங்கள். அங்கத்தவர் என்கிறாங்கள். அது ஒன்றுமில்லாமல் நாங்கள் டொனமூர்காலத்திலிருந்து தேர்தலில் அமோகவெற்றி பெற்றுவாறம். பத்துப் பிள்ளை பெத்தவளுக்கு தலைப் பிள்ளைகாரி முக்கிக்காட்டின கதையாகக் கிடக்கு." இவ்வாறு கூட்டணித் தலைவர்கள் தங்களுக்குள் கதைத்திருக்கக் கூடும்.

சோவியத் குழுவினர் கூட்டணிபற்றி கூறியதுதான் இங்கு கவனிக்க வேண்டிய விடயம். சோவியத் பிரதிநிதிகள் காலஞ்சென்ற வ. பொன்னம்பலத்திடம் (விபி) பின்பு தனிப்பட்ட முறையில் பேசும்போது "Their ambitions are great, but their organization is zero" (கூட்டணியின் நோக்கம் ஏதோ பெரிசாகக் கிடக்கிறது. ஆனால் அமைப்பு பூச்சியமாக இருக்கிறது) என்று கூறினர்.

கூட்டணித் தலைவர் காலஞ்சென்ற தர்மலிங்கம் எம்.பி இ.வ. பொன்னம்பலம் (விபி) கூட்டணியில் சேர்ந்தபோது கூறிய கருத்து மிகவும் சுவையானது. தர்மர் விபியிடம் சொன்னார் "நீங்கள் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிமாதிரி கூட்டணியில் அங்கத்தவர், அமைப்பு என்று எல்லாம் எதிர்பார்த்து வந்தியள் என்றால் ஏமாந்து போவியள்."

மேலே கூறப்பட்ட பின்னணியில் இன்றைய கூட்டமைப்பை நாம் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. கூட்டமைப்பை அமைப்புரீதியாகப் பலப்படுத்தவேண்டும் என்ற கூப்பாடு சமீபத்தில் எழுந்தது. அந்தக் கூக்குரல் பின்னர் தன்பாட்டிலேயே செத்துவிட்டது. உண்மையைச் சொல்லப்போனால் தமிழ்க் கட்சிகளுக்கு அமைப்பு அங்கத்துவர் என்று ஒன்றும் இருந்ததாக வரலாறு கிடையாது. தமிழ்த்தலைவர்களுக்கு அதைச் செய்யவேண்டிய தேவையுமில்லை. திருவிழாக் காலத்துக் கடலை வியாபாரிகள் மாதிரி அவர்கள் தேர்தல் நேரத்தில் தலைகாட்டுவார்கள். "மானம் போனதடா மறத்தமிழா!" என்று பேசித் தேர்தலில் வெற்றிபெறுவார்கள். யாராவது முக்கிக்காட்டுவது பிரயோசனமில்லாத வேலைதான்!

அன்ரன்



அவ்வளவு எளிதில் சாகாத உடலமைப்பைக் கொண்டது கரப்பான் பூச்சி.

மனிதனின் தலையை வெட்டிவிட்டால் அவ்வளவுதான், உயிர் போய்விடும். ஆனால் கரப்பான் பூச்சி தலையில்லாமலும் உயிர் வாழும்.

கரப்பான் பூச்சியின் உடல் பல துண்டுகளாகப் பிரிந்து, அவற்றின் ஓரங்களில் ஸ்பைரகில்ஸ் எனும் சிறு சிறு துவாரங்கள் இருக்கும். அவற்றின் வழியே கரப்பான் பூச்சி சுவாசிக்கும். எனவே தலையோ, மூக்கோ தேவையில்லை. கரப்பான் பூச்சியின் இரத்தத்தில் ஹீமோகுளோபின் இல்லை. எனவே அதன் இரத்தம் சிவப்பாக இருக்காது. வெண்ணிறமாக இருக்கும். தலை துண்டிக்கப்பட்டாலும் இரத்தம் அதிகமாக வெளியேறாது. தலையை இழந்தால் கரப்பான் பூச்சியால் எதையும் சாப்பிட முடியாது. ஆனால் தலை இல்லை என்றாலும் பல மாதங்கள் உயிரோடிருக்கும்.

# கரப்பான் பற்றி மேலும்!

# நண்பேன்டா!

- குமார் கணேசன் -

திணிக்கப்பட்ட உறவுகளை விட தேடியும், தேடாமலும் கிடைக்கும் உறவான நட்பு மிகவும் சிறந்தது.

உறவின் உச்சக்கட்டம் நட்பு என்பதை விளக்கத்தான் "தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன்" எனத் தந்தை - மகன் உறவைச் சொல்வார்கள்.

சாதி, மதம், மொழி, பணம், பதவி எனச் சாக்கடையில் விழுந்து கிடக்கும் இதயங்களைக் கூட பூக்கடையாய் மாற்றுவது நட்பு.

பூக்களின் வண்ணம், வாசனை, அழகு, அளவு என எதுவும் பார்க்காமல் நட்பு என்ற மாலையை அலங்கரிக்கும்.

புதிதாகப் பள்ளிக்கூடம் சென்ற ஒரு வாரத்திலேயே நண்பர்களைப் பெற்று, வார இறுதியில் கூட வகுப்புகள் நடைபெறாதா என ஏங்க வைப்பது இந்த நட்பே.

இளமைப் பருவத்தில் ஏற்படும் நல்ல நட்பு வாழ்நாள் வரை நிலைக்கும். தகவல் தொடர்பு முன்னேறி இருக்கும் இந்நாளில் கேட்கவே வேண்டாம். அது தொடர்ந்து வளரும்.

குடும்ப உறவுகளில் உயர்வு, தாழ்வு உண்டு. பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடு உண்டு. ஆனால் உண்மையான நட்பில், நட்பு மட்டுமே உண்டு.

ஒருவன் நல்ல இடத்தில் வந்து விட்டால், அவனை நண்பன் என்று சொல்லிக் கொண்டு வரும் பெரிய கூட்டமும் இருக்கத்தான் செய்கிறது. நல்ல நண்பர்களையும், நண்பன் என்ற பெயரில் ஏமாற்ற நினைப்பவர்களையும் நாம் அடையாளம் கண்டு வாழ்வது மிகவும் அவசியம்.

ஒரு குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன. அந்தக் குளத்தின் நீரைப் பயிருக்குப் பயன்படுத்தியதால் நாளுக்கு நாள் நீரின் அளவு குறைந்து கொண்டிருந்தது.

ஒரு கொக்கு அந்தக் குளத்தின் கரையில் சோகமாக நின்று கொண்டிருக்க, மீன்கள் அதன் கவலையின் காரணம் கேட்டன.

"இந்தக் குளத்தில் நீர் எல்லாம் வற்றிப் போனால் நீங்கள் செத்துப் போவீர்களே?" என்றது கொக்கு.

"நாங்கள் பிறந்தது முதல் இந்தக் குளத்தைத் தவிர வேறொன்றும் தெரியாது. நீங்கள் தான் பல இடங்களுக்குப் பறந்து சென்று வந்துள்ளீர்கள். நீங்கள் தான் எங்களுக்கு நல்ல வழி சொல்ல வேண்டும்" என்றன மீன்கள்.

"நண்பர்களே, இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு குளம் உள்ளது. அங்கே நீர் எப்பொழுதும் வற்றாது" என்றது கொக்கு.

இதைக் கேட்ட மீன்களின் முகத்தில் மகிழ்ச்சி. ஆனால் எப்படி அங்கே போவது என்ற கவலை.

"நான் ஒவ்வொருவராக வாயில் ஏந்தி, பறந்து சென்று, அந்தக் குளத்தில் விட்டு விடுகிறேன். நீங்கள் அங்கே பிழைத்துக் கொள்ளுங்கள்" என்றது கொக்கு.




நன்றியுள்ள மீன்களும் உடனே சம்மதித்தன.

ஒவ்வொரு நாளும் கொக்கு மீனை வேறு குளத்துக்கு எடுத்துச் செல்வதாகச் சொல்லி, அருகில் உள்ள பாறையில் வைத்துக் கொன்று தின்றது.

ஒரு நாள் ஒரு நண்டு தன்னையும் அந்தக் குளத்தில் கொண்டு போய் விடுமாறு கேட்டது. கொக்கும் தன் கழுத்தில் மெதுவாகக் கடித்து தொங்கிக் கொண்டு வருமாறு சொல்ல, நண்டும் அவ்வாறே செய்ய, கொக்கு நண்டைத் தூக்கிச் சென்றது.

கொஞ்சத் தூரம் பறந்து பாறை அருகே கொக்கு இறங்கி வரும் போது, கொக்கால் ஏமாற்றப்பட்டு கொக்குக்கு உணவான மீன்களின் மீதி எலும்புகள் இன்னொரு பாறை போலக் குவிந்து கிடப்பதை நண்டு பார்த்தது. கொக்கின் வஞ்சம் புரிந்து விட்டது நண்டுக்கு.

தன் கூரான பற்களால் கொக்கின் கழுத்தை நண்டு நறுக்க, கொக்கு பதறியது, துள்ளியது. பின் ரத்தம் கொட்டி இறந்தது.

நடந்து கொண்டே மீண்டும் குளத்துக்கு வந்த நண்டை மீன்கள் ஆச்சரியத்துடன் பார்த்தன. நண்டும் நடந்ததைக் கூற, நண்பன் எனச் சொல்லி ஏமாற்றிய தீய கொக்கைக் கொன்று தம்மைக் காத்த நல்ல நண்பன் நண்டுக்கு நன்றி சொல்லின.

கூடா நட்பினால் கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகி, படிப்பையும், வாழ்க்கை இழந்ததையும் காணலாம். எனவே, கவனமாகவும் இருக்க வேண்டும்.

பேனா நண்பர்கள் என முன்பு வெவ்வேறு நகரங்களிலும் நாடுகளிலும் இருந்தார்கள். முன்பின் தெரியாதவர்களுக்கு எழுதுவதிலும் அவர்களைப்பற்றித் தெரிந்து கொள்வதிலும் சிறுவர் முதல் பெரியவர் வரை பலர் ஆர்வம் காட்டினார்கள்.


இன்று இணையத் தளத்தில், சமூக வலைத் தளங்களில், முகநூல் போன்ற தளங்கள் உள்ளன. எல்லா நாடுகளிலிருந்தும் நண்பர்கள் சேர உதவியாக இருக்கின்றன.

ஆனால் நண்பர்களைப் போலவே, இணையத் தளத்திலும் நல்லது எது கெட்டது எது என்று, தெரிந்த பெரியவர்களிடம் அறிந்து கொள்ளவேண்டும்.

நண்பர்களைப் பெறுவது எப்படி? நீ ஒரு நல்ல நண்பனாக இரு, நிறைய நண்பர்கள் தானாகக் கிடைப்பார்கள். உன்னைப் பற்றி பேசுவதை விட மற்றவர்கள் பேசுவதைக் கேள். அது நட்புக்கு நல்ல உரமாகும்.

கண்ணீரைத் துடைப்பது உறவு என்றால், கண்ணீரைத் தடுப்பது நட்பு ஆகும்.

நட்பின் மூலம் உலகை ஒன்றாக்குவோம்.




சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## 1 பொது அறிவுத் துணுக்குகள்

1) இன்சுலினை உற்பத்தி செய்யும் மனித உறுப்பு எது?

2) கௌதம புத்தரின் பெற்றோர் யார்?

3) ஆசியாவின் ஒரே முதலைப் பண்ணை எங்குள்ளது?

4) முட்டையின் வெள்ளைக்கருவில் காணப்படும் புரதம் எது?

5) மனிதர்களில் மரபணுச் சிகிச்சை சாத்தியமானது எனக் கண்டறிந்தவர் யார்?

## 2

கீழேதரப்பட்ட வினாக்கள் இரகசியக் குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டவை. கீழே தரப்பட்ட பதில்களுக்குரிய இரகசியக் குறியீட்டுத் தொகுதியை எழுதுங்கள்

1) A X O S N — 2) W X Y S Z

3) Y M A S Z — 4) A C Q S B

5) O B P Q N — 6) A B C M N

1) கண்டனம் (................)

2) கடலரண் (................)


3) தண்டுலம் (................)

4) சந்திரன் (................)


5) தினகரன் (................)

## 3 இடைவெளி நிரப்புங்கள்


1)





2)





3)




4)




5)




## புதிர்ப்போட்டி 12 இற்கான சரியான விடைகள்

**1**

1) ஐஸ்லாந்து
2) ஐஸ்லாந்து நகரம் (ரேய்க் ஜாவித் நகரம்)
3) முகவரி
4) ஆங்கிலம்
5) மார்ட்டின் லூதர் கிங்

**2**

1) ரவி
2) கண்ணன்
3) கண்ணன்
4) முரளி
5) முரளி

**3**

1) பூனை, கிளி
2) நாய், பூனை
3) விம்மி, அம்மி
4) நாய், பூனை
5) அமலா

## புதிர்ப்போட்டி 12 இல் வெற்றியீட்டியோர்



பெயர்: ஆ.கீர்த்தனா
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்: த.மதுஷா
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



பெயர்: கி.சுயறூபி
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்: இ.பிரியதர்சினி
பாடசாலை: யா /உடுவில் மகளிர் கல்லூரி.



பெயர்: கு.ஜெயராமன்
பாடசாலை: யா/ மத்திய கல்லூரி.

## புதிர்ப்போட்டி 12 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

பெயர்: ஸ்ரீ. சஞ்சுதன்
பாடசாலை: யா/ சென்ஜோன் பொஸ்கோ

பெயர்: க.தினேஸ்
பாடசாலை: யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.

பெயர்: மெ.இங்கிதை
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

பெயர்: ரா.சுமித்தை
பாடசாலை: யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

பெயர்: செ.அபிமன்
பாடசாலை: யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.

பெயர்: து.கோகுலன்
பாடசாலை: யா/ இந்துக் கல்லூரி.

பெயர்: ரா.சஸ்மிதா
பாடசாலை: யா/ இந்துக் கல்லூரி.

பெயர்: கே.கோகிலவாணி
பாடசாலை: யா/ செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை.

பெயர்: க.பவித்திரா
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

பெயர்: ஜோன்சன் ரென் டேவிஸ்
பாடசாலை: யா/ பரியோவான் கல்லூரி.

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டி 14 இற்கான விடைகளை எதிர்வரும் நவம்பர் 08 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.



### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..............................


பாடசாலையின் பெயர் ..............................

தரம் :- ..............................

தொலைபேசி இல.:- ..............................

முகவரி :- ..............................

..............................



# கிராமத்தின் அபிவிருத்தி மேம்பட சரியான பிரதிநிதித் தெரிவு அவசியம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கரவெட்டிப் பிரதேச மக்களின் தவறான தெரிவினால் பின் தங்கிய கிராமங்களில் அபிவிருத்தி இடம்பெற வில்லை என ஈ.பி.டி.பி.யின் கரவெட்டிப் பிரதேச அமைப்பாளர் இ.செந்தில்நாதன் தெரிவித்துள் ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற கர வெட்டி, சோளங்கன் கிராம மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சோளங்கன் கிராமத்தில் நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத் திற்கு வரும் போது ஆளும்கட்சியுடன் இணக்க அரசியல் செய்யும் எமக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டோம். அதற்கிணங்க, மக்கள் வாக்களிக்காததால் வடமராட்சிப் பிரதேசத்தி லிருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையேனும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள் ளது. அதன் பின்பு உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் களைத் தெரிவு செய்வதில் பிழை விட்டது போல் அல்லாது, பிரதேச சபையை ஈ.பி.டி.பி. வசம் தந்தால் நாங்கள் சகல அபிவிருத்திகளையும் இக்கிராமத்திற்கு பெற்றுத் தருவோம் எனக் கூறி யிருந்தும் அதைச் செயற் படுத்தத் தவறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் பிரதேச சபையை ஒப் படைத்ததினால் தற்போது அவர்களால் மக்கள் எத்தகைய அபிவிருத்திகளையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள ளப்பட்டுள்ள னர்.

கரவெட்டிப் பிரதேசத்தின் அனைத்து அபி விருத்திகளையும் துரிதகதியில் முன்னெடுப் பதற்கு கடந்த காலத்தில் மக்கள் விட்ட தவறு களைக் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் சரியான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் ஊடாக அனைத்து அபிவிருத்திகளையும் பெற் றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரி வித்தார்.

இக்கலந்துரையாடலில் சோளங்கன் சனசமூக நிலைய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# ஊர்காவற்துறை பிரதேசசபையினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

(ஊர்காவற்துறை)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்புப் பழக் கத்தை விருத்தி செய்யும் நோக் குடன் ஊர்காவற்துறை பிரதேச சபை பிரதேச மாணவர்களி டையேயும் மற்றம் நூலக அங் கத்தவர்களிடையேயும் பல் வேறு போட்டிகளை நடாத்த உத்தேசித்துள்ளது. போட்டி களில் வெற்றிபெறும் மாணவர் களுக்கான பரிசில்கள் எழுவை தீவு பொதுநூலகத்தில் நடை பெறும் இறுதி நாள் நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளது.

தரம் 01.முதல் 03 வரை கதை சொல்லுதல், (நேரம் 05 நிமிடம் மாணவர் தாமாக ஒரு தலைப்பை) தெரிந்தெடுத்து கதை கூறல்) (தரம் 04 முதல் 05 வரை) பேச் சுப்போட்டி, உரிய தலைப்புக் களாக (நேரம் 05 நிமிடம்)

"நான் விரும்பும் பெரியார்", "வாசிப்பை நேசிப்போம்", "எனது ஊர்" போன்றனவாகும்.

(தரம் 06 முதல் 08வரை) சித்திரப்போட்டி உரிய தலைப் புக்களாக

வாசிப்பு, புத்தகம், நூலகம், போன்றனவாகும். அத்துடன் கட்டுரைப்போட்டி இருபிரிவு களாக நடைபெறவுள்ளதுடன்

கீழ் பிரிவு (தரம் 9 முதல் 11 வரையும்) தலைப்புக்களாக "நவீனத்துவ சூழலில் வாசிப் பும் இணையத்தளமும்", "வாசிப் பதால் மனிதன் பூரணமடைகின் றான்", "கல்வியும் வாசிப்பும்", "நூல்களே நல்ல நண்பர்கள்", போன்றனவாகும்.

மேல் பிரிவு (தரம் 12 முதல் 13 வரையும்) தலைப்புக்களாக "வளமானவாழ்வும் மானிடத் தின் மேம்பாடும்",

வாசிப்பும் சிந்தனை ஆற்ற லும்", வாசிப்பும் மொழியாற்ற லும்", "புத்தகங்களே சிந்தனை யின் திசைகாட்டிகள்" போன்றன வாகும்.

பொது அறிவுப் போட்டி (நூலக அங்கத்தவர்களுக்கு மட்டும்) இப்போட்டியில் பொது அறிவை உள்ளடக்கிய 40 வினாக்களைக் கொண்ட வினாத்தாள் வழங்கப் படும். போட்டிகள் பற்றிய மேல திக விபரங்களை பிரதேசசபை யின் பொது நூலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். என பிரதேச சபையினால் அறிவிக் கப்பட்டுள்ளது.

# வீதி அகலிப்புக்காக மின் விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக மின்மார்க் கங்களை இடமாற்றம் செய்யவேண்டியுள்ளதால் பின்வரும் இடங்களில் மின்தடை அமுல்படுத் தப்பட்டுள்ளது. இதன்படி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் புத்தூர், ஆவரங்கால், வாத ரவத்தை, வீரவாணி, உரும்பிராய், கோண்டா வில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ் மாநகரசபைப்பகுதி, யாழ் பட்ட ணப்பகுதி, ஸ்ரான்லி வீதி, கொட்டடி, நாவாந் துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத் துறை, பாசையூர், குருநகர், பிரதான வீதி, கொன் வன் பிரதேசம், பண்ணைப் பிரதேசம், சுன்னா கம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, குஞ்சர்கடை முதல் வல்லிபுரக் கோவில் வரையான கரணவாய் பிர தேசம், நெல்லியடிப் பிரதேசம், திக்கம், அல் வாய், பருத்தித்துறைப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், துன்னாலை, கற்கோவளப் பிரதேசம் ஆகியன உள்ளடங்கலான வடமராட்சிப் பிரதே சம் ஆகிய இடங்களில் மின்தடைப்படும்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை, சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர் கடைப் பிர தேசம், யாக்கருப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்தடைப்படும்.

17ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அள வெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர் கடைப் பிரதேசம், துன்னாலை, குடவத்தை பிர தேசம் ஆகிய இடங்களிலும்


19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அள வெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித் தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை, சாமி யன் அரசடிப் பிரதேசம், சம்மந்தர் கடைப் பிரதே சம், யாக்கருப் பிரதேசம் ஆகிய இடங்களி லும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியிலலாளர் அறிவித்துள்ளார்.



சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை ஏற் பாடு செய்திருந்த டெங் கொழிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தின்போது நகரசபை தலைவர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் பொதுச் சுகா தார உத்தியோகத்தர் களும் நகரசபை உத்தி யோகத்தர்களும் கலந்து கொண்டுள்ளதைக் காணலாம். [160]

# மெய்தான் பாருங்கோ...

## பெருமையின் வழி நோக்கி...



**காலங்கள** எவ்வளவோ மாற்றங் களைச் செய்து கொண்டு போகுது. அது இயற்கையான; செயற்கையான விடயங் களில மட்டுமல்ல, மனிசற்ற மனங்களில யும் மாற்றங்களைச் செய்யத்தான் முனை யுது. அந்த மாற்றம் எண்டது சில மனி சருக்குள்ள நல்லதாயும் அமைஞ்சி ருக்கு. கெட்டதாயும் அமைஞ்சிருக் குது பாருங்கோ.

நல்ல தெண்டது, ஒருவன் கெட்டவ னாக வாழ்ந்து கொண்டிருந்த நேரத்தை அனுபவங்களால திருத்தி, நேர் பாதை யில பயணிக்கச் செய்திருக்குது. சில மனிசர்களை அவையின்ர வாழ்க்கையில வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்த தோடை, அந்த மனிசரைப் பெருமை பிடிச்ச வையாகவும் தாங்கள் முன்பு கஷ்டமான சூழ்நிலையில வளர்ந்த விதத்தையும் நினைச்சுப்பாக்காத அளவுக்கு அவையளின்ர மனசை மாத்தி விட்டிருக்குது.

இப்படியான மனிசரைப்பார்த்து இவையளுக்குப் பக்கத்து வீடுகளில சீவிக்கிற ஆட்களும் தாங்களும் அதேமாதிரியான வசதி வாய்ப்புகளோடை வாழவேணுமெண்டு ஆசைப்பட்டு, ஏதேதோ வழிகளையெல்லாம் நாடிப்போய்... கடைசியில சில பேர் நலிவடைஞ்சு போயுமிருக்கினம்.

இதுகளைத்தான் பாருங்கோ 'பெருமையின் ஆஷிகள்' எண்டு சொல்லுறது. வாழ்க்கையில கிடைக்கிற வருமானத்தைக் கொண்டு வாழ முற்படுகிறவர்களுக்கு பெரும்பாலும் கஷ்டங்கள், சிரமங் கள் தெரியாது. ஆனா, வருவாய்க்கு மிஞ்சி ஆடம்பரத்துக்காக செலவு செய்ய வெளிக்கிடுகிறது... கடைசியில கடனாளியாகிப் போறது மட்டுமல்ல, பிள்ளைகுட்டியளுக்கும் அந்தக்கடன் சுமையை ஏத்திவிட்டிட்டுப் போறதாகவும்தான் இருக்கும்.

ஒருத்தருடைய கடின உழைப்பைப் பாத்து இன்னொருவர் அதேமாதிரி உழைச்சு முன்னேறுகிறது பாராட்டப்படவேண்டிய விசயம். ஆனா, சிலரது பெருமையின் செய்கை காரியங்களைப் பாத்திட்டு, தாங்களும் அதேமாதிரிச் செய்யாட்டி அது ஒரு கௌரவக்குறைச்சல்... எண்டு நினைக்கிறதும், அதை ஈடுசெய் கிறதுக்கு தவறான வழிகளில இறங்கிறதும்தான் பிழையான காரியம்.

இப்பிடிப் பிழையான காரியங்களில இறங்கேக்க அதின்ர தாற்பரியம் உடன விளங்காது. காலம் மெல்ல உருளத் தொடங் கத்தான் அதன் கனதி எப்படிப்பட்ட தெண்டது புரியவரும்.

கோயில் தேர்த்திருவிழாவுக்கு பக்கத்து வீட்டுக்காரன் அகலக் கரை வேட்டி கட்டிக்கொண்டு போறான் எண்டிட்டு, இன்னொ ருவன் உடுக்கக் கூடிய தன்ர நாலுமுழு வேட்டியை ஒதுக்கிப் போட்டு, அகலக்கரை வாங்கிறதுக்காக மேலதிகமாகச் செல வழிக்கிறதுதான் பெரிய பிழையான காரியம் கண்டியளே!

சில இடங்களில நான் கவனிச்சுப் பாத்திருக்கிறன். ஒரு வருசத் தில வாற தைப்பொங்கல், வருசப்பிறப்பு, ஆவணிமாத கோயில் திருவிழாக்கள் பிறகு கௌரிக்காப்பு, கந்தசஷ்டி விதரங்கள், தீபாவளி, நத்தார்... எண்டு ஒவ்வொரு கொண்டாட்டங்களுக்கும் உடுதுணியள் வாங்கியே தீர வேணும். இல்லாட்டி அது ஒரு கௌரவம் குறைஞ்ச செயற்பாடாகத் தெரியும். இப்படியே ஒவ் வொரு வருசமும் வாங்க வெளிக்கிட்டால் வருச வருமானத் தின்ர காற்பங்கு காணாமல் போகுமெண்டது தெரிஞ்சும் வாங்கிக் கொண்டுதான் சிலபேர் இருக்கினம்.

சரி இதைவிடுவம். நான் இன்னொண்டை முக்கியமாச் சொல்ல வாறன்.

உந்த அரச, தனியார் நிறுவனங்களிலையும் வேறை இடங்களிலையும் வேலை செய்யிற சில ஆட்கள் தங்கட பிறந்தநாள் அண்டைக்கு தமக்கான வசதி வாய்ப்புக்களைக் காட்டிப் பெருமையடிக்கிற சம்பவங்களும் நடக்குது பாருங்கோ!

18 அல்லது 20 தொகையில சம்பளம் எடுக்கிற வசதியான ஆட்கள் பிறந்தநாள் தினத்தில 'மிதிவெடி' மட்டன்றோல், வடை, கேக், அது... இதெண்டு வாங்கிக் குடுத்துக் கொண்டாடினால், அந்தத் தொழில் நிறுவனத்துக்குள்ள 7 அல்லது 9 தொகையில குறைஞ்ச சம்பளம் எடுக்கிற ஆட்களும் 'கௌரவக் குறைச்சல்' கருதி அதேமாதிரி விலை கூடின தின்பண்டங்களை வாங்கிக் குடுத்துக் கொண்டாடுகினம். பிறகு மாசம் முடிய சம்பளத்தை வாங்கிக் கணக்குப் பாக்கேக்கைதான். கையைச் சுடுகிறது... கடிக்கிறது.... தெரியவரும். பிறந்தநாள் எண்டு சொல்லுறது, பிறந்தவரை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறதும், பிறப்புக்குரியவர் தன்ர அன்பை வெளிப்படுத்தும் முகமாக இனிப்புகள் கொடுக்கிறதும் எண்டதையும் நான் இப்ப இதில சொல்லவாறன்.

எனக்கு உந்தப் பிறந்தநாள் விசயத்தில ஒருகசப்பான அனு பவம். அது என்னெண்டால் பாருங்கோ! நான்முந்தி ஒரு கொம் பனியில வேலை செய்தனான். அந்தக் கொம்பனியில ஒரு பிள்ளை தன்ர பிறந்த நாளண்டைக்கு வடை, றோல் மிதிவெடி... எண்டு தர, நான் வேண்டாமெண்டு திருப்பி விட்டிட்டன். தன்னை அவமானப் படுத்திப்போட்டனெண்டு பிள்ளைக்கு முகம் சுண்டிப்போச்சுது பாவம் அந்தப்பிள்ளை. மற்றாக்களைப் போல விலை கூடினதில வாங்கிக்குடுக்காமல் தனிய 'ரொபி' மட்டும் குடுத்தால் தன்னை மதிக்கமாட்டினம் எண்டு நினைச்சிட்டுது. போலக்கிடக்குது அந்தப்பிள்ளையின்ர பிறந்த நாளைச் சாட்டாக வைச்சு அவளின்ர அந்தச் சம்பளப்பணத்தில நான் வாய் வைக்க விரும்பேல்லைப் பாருங்கோ. இதைப்புரிஞ்சு கொள்ளுறதும் புரி யாமல் விடுகிறதும் அவரவர் மனசைப் பொறுத்தது கண்டியளே!

- **சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# நீதித்துறையின் சுதந்திரம் 78 ஆம் ஆண்டே பறிபோனது

## - ஓய்வு பெற்ற நீதிபதி விக்னேஸ்வரன் தெரிவிப்பு -

(கொழும்பு)

இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை 1978 ஆம் ஆண்டு ஜே ஆர் ஜெயவர்தன ஆட்சியின் போது அமுலுக்கு வந்த புதிய அரசியல் சட்டத்துடன் பறிபோனதாக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன் பி.பி.சி.தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த நீதித்துறை போராட்டங்கள் மற்றும் சர்வதேச நீதிமான்கள் கவுன்சில் இலங்கையின் நீதித்துறையின் நிலை குறித்து விடுதத அறிக்கையின் பின்னணியில், இலங்கையில், ஒரு ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டிய அளவுக்கு, சுயாதீனத் தன்மையுடன் நீதித்துறை செயற்பட முடிகிறதா என்று பி.பி.சி.கேட்டதற்கு, 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுதந்திரமாக செயறபட்ட நீதித்துறை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, 1978 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது முதல் தனது சுதந்திரத்தை இழந்துவிட்டது என்றார் விக்னேஸ்வரன்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை என்பது அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி என்ற ஒரு நபரிடம் குவித்த நிலையில், ஜனநாயகத்தில், நீதித்துறை, நாடாளுமன்றம் மற்றும் அதிகாரவர்க்கம் என்று சொல்லப்படுகின்ற மூன்று முக்கிய துறைகளுக்குமிடையே இருக்க வேண்டிய கட்டுப்பாடுகள் மற்றும் சமப்படுத்தல்களை அகற்றி விட்டது

இந்த நிலைமையை ஓரளவுக்கு 17 ஆவது அரசியல் சட்டத்திருத்தம் சரி செய்தது என்றும் ஆனால் அந்த சட்டத் திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் சட்ட கவுன்சிலை பின்னர் வந்த மகிந்த ராஜபக்ஷ அரசு இயங்கவிடாமல் செய்துவிட்டது என்றார்.

இப்போது நிலைமை சரியாக்கப்பட்டு, நீதித்துறை சுயாதீனமாக செயற்படவேண்டுமென்றால், இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அகற்றப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(கரவெட்டி)

கரவெட்டி - துன்னாலையைச் சேர்ந்த திருநாவுக்கரசு யோகேந்திரன் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி.திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளரான இவர் நெல்லியடி லயன்ஸ் கழகத்தின் தலைவரும், சிறந்த சமூக சேவையாளருமாவார். (01)

# உதவித்தூதரகம் மெல்போனில் திறப்பு

அவுஸ்ரேலியாவில் உள்ள மெல்போன் நகரில் இலங்கைக்கான உதவித் தூதரகம் ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இதற்கான வேண்டுகோளை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

அவுஸ்ரேலியாவிலுள்ள விக்டோரியா- தென் அவுஸ்ரேலியா மற்றும் தஸ்மேனியா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியதாக இந்த உதவித்தூதரகம் செயற்படும். தொழில்வாய்ப்பு - கல்வி- வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியதுறைகளில் ஈடுபட்டு 80 ஆயிரத்துக்கும் ஒரு இலட்சத்துக்கும் இடைப்பட்ட இலங்கை மக்கள மெல்போன் நகரில் வாழ்கின்றனர். அவர்களின் நலன்களைக் கவனிக்கும் முகமாகவே இலங்கைக்கான உதவித்தூதரகம் அங்கு திறக்கப்படவுள்ளது.

# இலங்கை – இந்திய வர்த்தகம் செயற்பாட்டு அணி அமைப்பு

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டில் இலங்கை மற்றும் இந்திய நாடுகள் நன்மையடையும் வகையில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இரு நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய பொதுவான செயற்பாட்டு அணியை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதற்கான பிரேரணையை கைத்தொழில் மற்றும் வர்த்தக விவகார அமைச்சர் ரிஷாட் பதியுதீன் முன்வைத்திருந்தார்.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையே நடைபெறும் வர்த்தகத்தின் வருடாந்த பெறுமதி 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதி 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியை முன்னேற்றுவதற்கு உதவியாக ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட விசேட பொருளாதார வலயம் ஒன்றை திறன் அபிவிருத்திக்கான வசதிகளுடன் நிறுவுவதற்கும் இந்தியா உடன்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்

# ஆண்டான்குள பாடசாலையின் பிரதான நுழைவாயில் திறப்பு



(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னார் - ஆண்டான்குளம் பாடசாலையின் பிரதான நுழைவாயில் அப்பாடசாலையின் பழைய மாணவன் தேசமான்ய அல்ஹாச் சீ.எம்.எம். யாசீன் அவர்களின் சொந்த நிதியில் இருந்து கட்டப்பட்ட நிலையில் குறித்த நுழைவாயில் வைப்வ ரீதியாக திறப்பு விழா செய்யும் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை பாடசாலையில் இடம் பெற்றது.

அப்பாடசாலையின் அதிபர் ஜீ.அந்தோனிப்பிள்ளை தலைமையில் மடு வலயக் கல்விப் பனிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் அனுமதியுடன் அப்பாடசாலையின் பழைய மாணவன் தேசமான்ய அல்ஹாச் சீ.எம்.எம்.யாசீன் சொந்த நிதியில் இருந்து அமைகப்பட்ட குறித்த நுழைவாயிலினை அப்பாடசாலையின் முன்னாள் அதிபர் ஏ.அந்தோனிப்பிள்ளை அவர்களினாலும், பழைய மாணவன் தேசமான்ய அல்ஹாச் சீ.எம்.எம்.யாசீன் அவர்களினாலும் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது மடு வலயக் கல்விப்பனிப்பாளர் ஏ.ஜே. குரூஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். குறித்த பழைய மாணவனான தேசமான்ய அல்ஹாச் சீ.எம்.எம். யாசீன் தான் கல்வி கற்ற இந்த தமிழ் பாடசாலைக்கும், ஆண்டான்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கும் அவரது சொந்தப் பணத்தினை ஒதுக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது

# வாசிப்பு மாதத்தில் விசேட செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி வாசிப்பை ஊக்குவிக்கும் பொருட்டான வாசகங்களை உள்ளடக்கிய பதாகைகள், சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல். கட்டுரை, சித்திரம்,பேச்சு, பாட்டு ஆகிய போட்டிகளை நடத்துதல், சஞ்சிகை ஆக்கம் வெளியிடல், நூலகத்தை புதுப்பித்தல், கணினி, இணைய வசதிகளை ஏற்படுத்துதல், வாசகர்களின் தொகை அதிகரித்தலும் ஊக்குவித்தலும், நூலக வளங்களைப் பேணலும் பாதுகாத்தலும், கதை சொல்லும் நேரம் மற்றும் இலக்கியம் சார்ந்த படக்காட்சி நடாத்துதல்,

மேலும் நடமாடும் நூலக சேவைகளை சனசமூக நிலையங்களூடாக முன்பள்ளிகளில் நடத்துதல் போன்ற செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடமாடும் நூலக சேவைகளை நடத்துதல், திறனை மதிப்பிட்டு பரிசில்கள் , மற்றும் சான்றிதழ்களை விழா நடத்தி வழங்குதல் போன்ற செயற்திட்டங்களை சென்ற வருடம் போல இவ் வருடமும் சிறப்புற நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக கைதடி பொதுநூலக சேவகர் க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்

# சந்தேக நபர்களை 48 மணி நேரம் தடுத்துவைக்க சட்டத் திருத்தம்

சந்தேக நபர்களை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்வது தொடர்பான உத்தேச சட்டத் திருத்தம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குள்ள குற்ற வழக்கு விசாரணை சட்டத்தின் விசேட ஏற்பாடுகளில் சில திருததங்கள் செய்யப்பட வேண்டுமென அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த உத்தேச சட்டம் தொடர்பில் எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதிக்கப்பட உள்ளது. பிடி ஆணை இன்றி கைது செய்யப்படும் நபர்கள் தடுத்து வைக்கப்படும் காலத்தை இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் நீடிக்க முடியும்



நீர்வேலி, சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வின் போது மாணவர்கள் அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் ஆசிவேண்டுவதனையும், மாணவர்களால் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் மலர் மாலை சூட்டி கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (03)

# பொதுக்கூட்டம்


(ஆனைக்கோட்டை)


யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மிகவும் நீண்ட காலத்தின் பின்னரான பொதுக்கூட்டம் பல கிராம சேவையாளர்களின் அழுத்தத்தின் பிரகாரம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்.பல.நோக்கு கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (104)


# க.பொ.த. சாதாரணதர
# அலகு ரீதியான மீட்டல் பயிற்சி
## விஞ்ஞானம்

*அலகு ரீதியான மீட்டல் பயிற்சி தொடர்ச்சி....*




பயிற்சி :
வாகனமொன்றின் இயக்கத்திற்கான வேகநேர வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இவ்வரையைப் பயன்படுத்தி அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.




a) வாகனத்தின் உயர்கதி யாது?
b) வாகனத்தின் இயக்கத்தை விவரிக்க.
c) வாகனம் ஆர்முடுகலுடன் சென்ற தூரம் யாது?
d) வாகனம் சென்ற மொத்தத் தூரம் யாது?

03) தேவையான இடங்களை நிரப்புக.
விசை:- ஓய்வில் இருக்கின்ற அல்லது .......................... பொருள் ஒன்றின் மீது மாற்றத்தை ஏற்படுத்துகின்ற அல்லது மாற்றத்தை .......................... காவிக் கணியம் விசை எனப்படும்.

விசையைப் பிரயோகிப்பதன் மூலம் செய்யக்கூடியவை.
- ..........................................................................
- ..........................................................................
- ..........................................................................

விசையை அளவிடும் அலகு:
1 kg திணிவுக்கு $1ms^{-2}$ ஆர்முடுகலை ஏற்படுத்தத் தேவையான விசை .......................... எனப்படும்.

நியூட்டனின் இயக்கம் தொடர்பான விதிகள்.
1) புறவிசை தாக்காவிட்டால் பொருள் ஓய்வில் அல்லது நேர்கோடு வழியே சீரான வேகத்துடன் இயங்கிக் கொண்டு இருக்கும்.
ii) ..........................................................................
..........................................................................
iii) ..........................................................................
..........................................................................

பயிற்சி :-
i) 12 kg திணிவுக்கு $5ms^{-2}$ ஆர்முடுகலை அளிக்கத் தேவையான விசையைக் காண்க.
ii) 120 N விசையை 20kg திணிவின் மீது பிரயோகிக்கும்போது உண்டாகும் ஆர்முடுகல் எவ்வளவு?
iii) 200N விசை பிரயோகிக்கப்பட்டு பொருள் ஒன்று $2.5\ ms^{-2}$ ஆர்முடுகலுடன் இயங்கச் செய்யப்பட்டதாயின் பொருளின் திணிவு யாது?

**B வேலையும் சக்தியும் (Work and Energy)**

1. தேவையான இடங்களை நிரப்புக.

**வேலை - (Work)**
பொருளின் மீது விசையைப் பிரயோகித்து விசை தாக்கும் .......................... அதன் .......................... இயங்கும் போது வேலை நடைபெறுகின்றது.

| வேலை = .......................... x .......................... |
|---|

வேலை, சக்தி ஆகியவற்றை அளவிடும் அலகுகள் : ..........................

**வலு** - power
.......................... செய்யும் வீதம் வலு எனப்படும்.

| வலு = .......................... / .......................... |
|---|

வலுவை அளவிடும் அலகுகள் : ..........................

| மின்சாதனம் | வலு (w) |
|---|---|
| i) மின்குமிழ் | 60w .......................... |
| ii) அமிழ்ப்பு வெப்பமாக்கி | .......................... |
| iii) மின்கேத்தல் | .......................... |
| iv) குளிர்சாதனப்பெட்டி | .......................... |
| v) தொலைக்காட்சிப் பெட்டி (கறு.வெ) | .......................... |
| vi) தொலைக்காட்சிப் பெட்டி (நிறம்) | .......................... |
| vii) மின் அரைப்பான் | .......................... |

பயிற்சி:-
1. பொருள் ஒன்றின் மீது 2000N விசை பிரயோகிக்கப்பட்டு 8m தூரம் நகர்த்தப்பட்டதாயின் செய்யப்பட்ட வேலையின் அளவைக் காண்க.
2. நீர் கொண்ட வாளி ஒன்று 2.5 S இல் 50N விசையினால் 7m தூரம் நிலைக்குத்தாக உயர்த்தப்பட்டது.
   a. செய்யப்பட்ட வேலையின் அளவு யாது?
   b. வேலை செய்யப்படும் வீதம் எவ்வளவு?

3. 1500 W எனக் குறிக்கப்பட்ட வெப்பமாக்கும் சுருள் அதன் முழு வலுவுடன் 5 நிமிடங்களுக்கு நீரைச் சூடாக்கப் பயன்படுத்தப்பட்டது. வெப்பமாக்கும் சுருள் பயன்படுத்திய சக்தியின் அளவு யாது?

**இடைவெளி நிரப்புக**

- தன் வெப்பக் கொள்ளளவு (Specific beat capacity) - S

யாதாயினும் ஒரு பொருளின் .......................... ன் வெப்பநிலையை .......................... இனால் உயர்த்தத் தேவையான வெப்பத்தின் அளவு அப்பொருளின் தன்வெப்பக் கொள்ளளவு எனப்படும்.

- இதன் அலகுகள் :- ..........................
- பொருளில் புகும் அல்லது வெளியேறும் வெப்பக் கணியம் தங்கியுள்ள காரணிகள்.

a) .......................... (m)
b) .......................... (s)
c) .......................... (θ)

| வெப்பக்கணியம் = .......................... x .......................... x .......................... <br> $Q = ms\theta$ |
|---|

பயிற்சி :-
1. 200g திணிவுள்ள கண்ணாடிப் பாத்திரம் 500g நீரைக் கொண்டுள்ளது. இதன் வெப்பநிலையை $30^0C$ யிலிருந்து $80^0C$ யிற்கு உயர்த்தப்பட்டது.

a) கண்ணாடிப் பாத்திரம் பெற்ற வெப்பம் எவ்வளவு?
b) நீர் பெற்ற வெப்பம் எவ்வளவு?

2. 100g திணிவுள்ள அலுமினியப் பாத்திரம் 450g நீரைக் கொண்டுள்ளது. பன்சன் சுடரடுப்பைப் பயன்படுத்தி $32^0C$ யிலுள்ள இந்நீர் $92^0C$ வரை சூடாக்கப்பட்டது.
   a) அலுமினியப் பாத்திரம் பெற்ற வெப்பம் எவ்வளவு?
   b) பன்சன் சுடரடுப்பு வழங்கிய வெப்பம் எவ்வளவு?
   (சூழலிற்கு வெப்ப இழப்பைப் புறக்கணிக்க)

| | | |
|---|---|---|
| கண்ணாடியின் த.வெ.கொ. | - | $670\ Jkg^{-1}\ C^{-1}$ |
| அலுமினியத்தின் த.வெ.கொ | - | $900\ Jkg^{-1}\ C^{-1}$ |
| நீரின் த.வெ.கொ. | - | $4200\ Jkg^{-1}\ C^{-1}$ எனக் கொள்க. |

3. தன் வெப்பக் கொள்ளளவு தொடர்பான பிரயோகங்கள் தருக.

**சக்திக் காப்பு - Conservation of Energy**

சக்தி .......................... இல்லை. சக்தி ஒரு நிலையிலிருந்து வேறோர் நிலைக்கு மாறலாம்.

பொருள் ஒன்றின் நிலை காரணமாக அது கொண்டுள்ள சக்தி .......................... எனப்படும்.
உதாரணம்:- மரத்திலுள்ள தேங்காய், .......................... , ..........................

| அழுத்த சக்தி = .......................... x .......................... x .......................... <br> Potential Energy |
|---|

இயங்கிக் கொண்டிருக்கும் பொருள் கொண்டுள்ள சக்தி .......................... எனப்படும்.

| Kinetic Energy <br> இயக்க சக்தி = 1/2 x .......................... x .......................... |
|---|

சக்தி ஒரு நிலையில் இருந்து பிறிதோர் நிலைக்குமாறல் சக்திநிலை மாற்றம் (Energy transformation) எனப்படும்.

| சக்தி நிலைமாற்றம் | சாதனங்கள் |
|---|---|
| ஒளி → மின் | ........................ |
| மின் → ஒளி | ........................ |
| மின் → ஒலி | ........................ |
| இரசாயனசக்தி → மின் → ஒலி | ........................ |
| மின் → இயக்கம் | ........................ |
| இயக்கம் → மின் | ........................ |

பயிற்சி :-

a) 6.5 m உயரமான நீர்த்தாங்கி ஒன்றில் 2000kg நீர் உள்ளது. நீரின் அழுத்தசக்தி எவ்வளவு? ($g = 10ms^{-2}$)

b) 40 $ms^{-1}$ என்னும் வேகத்தில் இயங்கும் 5 kg திணிவுள்ள பொருளின் இயக்கப்பாட்டு சக்தி எவ்வளவு?

**04) பொறிகளின் திறன் (Efficiency of machines)**

தேவையான இடங்களை நிரப்புக.

பொறியின் சதவீதத் திறன் = $\frac{\text{........................}}{\text{........................}}$ x 100

பொறியின் திறன் குறையும் சந்தர்ப்பங்கள்.

| சாதனம் | திறன் குறையும் வழிமுறைகள் | தடுக்கும் முறைகள் |
|---|---|---|
| மின்குமிழ் | வெப்பம் | மேம்படுத்தப்பட்ட மின்குமிழ் பாவனை |
| அடுப்பு | .................... | .............................. |
| மின்மோட்டர் | .................... | .............................. |
| தையற்பொறி | .................... | .............................. |

சூரியனிலிருந்து புவிக்கு வெப்பம் கிடைக்கும் பிரதான முறை ...............

வெப்பம் இடமாற்றப்படும் முறைகள்

a) ...............
b) ...............
c) ...............

வெப்பக் குடுவையில் வெப்ப இழப்பைத் தடுக்கும் உபாயங்கள்

..............................................................................

பயிற்சி :-

1. 100 N நிறையுடைய சுமையை கப்பிமூலம் மேலுயர்த்த 110 N விசை பிரயோகிக்கப்பட்டது. பொறியின் திறனைக் காண்க.

2. மின் மோட்டார் ஒன்றிற்கு 6000 $Js^{-1}$ சக்திக் கணியம் வழங்கப்படுகின்றது. இதில் 60% இயக்கப்பட்டு சக்தியாக மாற்றப்பட்டு மோட்டார் சுழற்றப்படுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. 20% வெப்பசக்தியாக இழக்கப்படுகின்றது. 1200 J சக்தி ஒலியாக மாற்றப்படுகின்றது.

ய) மோட்டரை சுழற்றப் பயன்படுத்திய சக்தி எவ்வளவு?
டி) வெப்பமாக மாறிய சக்தி எவ்வளவு?
உ) மோட்டரின் திறன் எவ்வளவு?

**05) சக்தி ஊடுகடத்தல் Energy transmission**

| சாதனங்கள் | சக்தி ஊடுகடத்தல் முறை |
|---|---|
| தையல் இயந்திரம் | அந்தமில்லாப்பட்டிகை |
| மணிக்கூட்டுப் பொறி | .............................. |
| மோட்டார் சைக்கிள் | .............................. |
| அரிசி ஆலைப்பொறி | .............................. |
| வாகன கியர்த் தொகுதி | .............................. |

**C விசை, சக்தி ஆகியவற்றின் பயன்பாடுகள்.**


விசைத் திருப்பம் - Moment of Force.

விசைத்திருப்பம் = ................. x.............................


இதனை அளவிடும் அலகு:-

பயிற்சி :-

1. படத்தில் காட்டியவாறு விசைகள் தொழிற்படுகின்றன.





x இன் அளவைக் காண்க.




w.இன் பெறுமானத்தை N இல் தருக

3. நெம்பு வகைகள்

| | 1ஆம் வகை | 2ஆம் வகை | 3ஆம் வகை |
|---|---|---|---|
| வரிப்படம் :- |   | .................. | .................. |
| உதாரணங்கள் :- | குறடு கத்தரிக்கோல் | .................. | .................. |

பொறிமுறை நயம் - **Mechanical Advantage**

பொறிமுறை நயம் = ...............................

வேக விகிதம் - **Velocity ratio**

வேக விகிதம் = $\frac{\text{..............................}}{\text{..............................}}$

எளிய பொறி வகைகள் :-
a) ..........................................
b) ..........................................
c) ..........................................
d) ..........................................
e) ..........................................

பயிற்சி :-

1. அழுத்தமான சாய்தளமொன்றின் நீளம் 5 m ம் செங்குத்துயரம் 3 m உம் ஆகும். இதன் மீது 800 N சுமை ஒன்று தளத்தின் வழியே இழுத்துச் செல்லப்பட்டது.

a) சாய்தளத்தின் வேகவிகிதம் எவ்வளவு?
b) பொறிமுறை நயம் எவ்வளவு?
c) சுமையை உயர்த்தத் தேவையான எத்தனம் எவ்வளவு?

# English Language
# Answer I -II

## (Part -I)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. Happened | 2. at | 3. gone | 4. as | 5. function |
| 6. for | 7. send | 8. to | 9. leaving | 10. to |

02)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. c | 2.e | 3. d | 4. b | 5. a |

03)
1. Award marks for sentences which describe the picture.
No marks for grammatical errors.

04)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. aunt | 2. Ratnapura | 3. village | 4. lost | 5. ago |

05)
1. You still remember me
2. You made me continue my studies
3. promoted as the Bank Manage
4. My heartiest Congratulations!
5. All the credits

06) Award marks if the writing is appropriate. Penalise the student for grammatical mistakes.

07) 1. scribbling on the sky the massage He is Dead. (award marks if the child has written 'He is Dead' only
2. a) cut off b) bring out 3) a) juicy bone b) come
4) a) coffin b) dove
5) Piano / drum.

## Part II)

09) 1. interesed 2. remarkable 3. exceptional
4. failure 5. traditional 6. beautiful
7. nervous 8. interesting 9. peacefully
10. awefully

10) 1. - 2. adverb 3. preposition 4. noun 5. preposition
6. artical (indefinite)

11) 1. Stay 2. smoke 3. away
4. water 5. alcohol 6. hours
7. bed 8. early 9. take
10. doctor

12) 1. d 2. c 3. e 4. a 5. b

13) 1. on 14th (morning) 2. at Ambewala 3. on 14th (evening)
4. at Rawana Ella
5. Going to Bandarawela / Spending the day at Bandarawela or any appropriate answer. (for question 1 -4 preposition is a must)

14) Examiner's descretion.

15) 1. hotel 2. in a Tudor mansion
3. It was no ordinary flat
4. a) F b) T c) F
5) a) Jack and Liza b) Old lady c) flat d) Jack and Liza

16) Examiner's descretion.

# 3 மில்லியன் பெண் சிசுக்கள் கடந்த 10 வருடத்தில் கொலை

இந்தியாவில் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2011 வரையிலான காலங்களில் 3 மில்லியன் பெண் சிசுக்கள் கொல்லப்பட்டதாக இந்திய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து, இந்திய புள்ளியியல் அமைப்பு மேலும் தெரிவிப்பதாவது,

இந்தியாவில் தினமும் 2000 பெண் குழந்தைகள் ஏதாவது ஒரு விதத்தில் படுகொலை செய்யப்படுகின்றனர். ஒரு வீட்டில் இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்தால் அதை அழிப்பதில் 54 சதவீதம் பேர் ஈடுபடுகின்றனர். இரண்டு பெண் குழந்தைகள் இருந்து 3 ஆவதாக பெண் குழந்தை பிறந்தால் 20 சதவீதம் பேர் அதை அழிப்பதில் ஈடுபடுகின்றனர்.

இதன் காரணமாக பிறந்த முதல் 6 வயதிலான பெண் குழந்தைகளின் எண்ணிக்கை முன்பை விட தற்போது குறைந்திருக்கிறது. அதாவது 1000 ஆண் பிள்ளைகளுக்கு 48 பெண் பிள்ளைகள் குறைவாகவே நாட்டில் காணப்படுகின்றனர்.

இதுதவிர நாட்டில் பெண்கள் கடத்தப்படுவது 43 சதவீதம் அதிகரித்துள்ளது. கற்பழிக்கப்படுவது 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன்படி கடந்த 2011 ஆம் ஆண்டில் 7, 112 வழக்குகள் பெண் பிள்ளைகள் கற்பழிக்கப்பட்டதற்காக பதிவானதாகும். இந்த வழக்குகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் 5,484 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.





இந்தியா வந்துள்ள ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் அனடோலி செர்டியூகோவை, தலைநகர் புதுடில்லியில் கைகுலுக்கி வரவேற்கும் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே அந்தோணி.

இந்தியச் செய்திகள்

# பெண்களுக்கு ஆபாச எஸ்.எம்.எஸ் அனுப்பினால் 3 வருட சிறைவிதிப்பு



பெண்களை ஆபாசமாக சித்தரித்து எஸ்.எம்.எஸ். மற்றும் மெயில் அனுப்பினால் அவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பெண்களை ஆபாசமாக சித்தரிப்போருக்கு தண்டனை வழங்கும் வகையில் கடந்த 1986 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டது.


தற்போது நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்துவிட்ட நிலையில், எஸ்.எம்.எஸ்., எம்.எம்.எஸ். இ-மெயில் மூலம் ஆபாச படங்களை அனுப்பும் செயல் அதிகரித்துள்ளது. இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்கும் வகையில், சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதையடுத்து இந்த சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிகிறது. இந்த சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வந்தால், பெண்களுக்கு ஆபாச மெயில் அனுப்பும் குற்றச்செயலில் ஈடுபடும் நபருக்கு அதிகபட்சம் 3 .ஆண்டு வரை சிறைத்தண்டனை கிடைக்கும். மேலும் முதல் முறையாக இக்குற்றத்தை செய்வோருக்கு குறைந்தபட்ச அபராதம் 2000 ரூபாயில் இருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக ரூபா 1 இலட்சம் வரை அபராதம் விதிக்க முடியும். ஒரு முறை தண்டனை பெற்று இரண்டாவது முறையும், இக்குற்றச் செயல்களில் ஈடுபட்டால் சிறைத்தண்டனை 7 ஆண்டுகளாக நீட்டிக்கப்படலாம். இதேபோல் அபராதம் ரூபா 1 இலட்சம் முதல் ரூபா 5 இலட்சம் வரை விதிக்கப்படலாம்

# காவிரி நதி நீர் விவகாரத்தில் கருணாநிதி பேசுவது சரியல்ல

## பாய்கிறார் தேவகௌடா



(பெங்களூரு)

காவிரி நதி நீர் விவகாரத்தில், தி.மு.க., தலைவர் கருணாநிதி, தன் உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்காக, கர்நாடகாவுக்கு விரோதமாக பேசுவது சரியல்ல, என, முன்னாள் பிரதமர் தேவகவுடா கூறினார்.

பெங்களூரில், மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சி அலுவலகத்தில் நடந்த ஜெயபிரகாஷ் நாராயண் பிறந்த நாள் விழாவில் தேவகவுடா பேசியதாவது; வறட்சி விவாதம் தொடர்பாக, அண்டைய மாநில தலைவர்களின் அறிக்கைகளையும், பேச்சுகளையும் கவனித்தால், எந்த சூழ்நிலையில் உள்ளோம் என்ற ஆதங்கம் ஏற்படுகிறது. அண்டை மாநில அரசியல்வாதிகள், நாட்டின் ஒற்றுமை மற்றும் நட்புறவுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவது தெரிகிறது.

தி.மு.க., தலைவர் கருணாநிதி, தன் உரிமையை காப்பாற்றிக் கொள்ள, "கர்நாடகாவின் ஆளும் அரசை கலையுங்கள்" என்று அறிக்கை விடுத்துள்ளார். ஆரம்பம் முதலே அரசியல் சாசன, 356 விதியை எதிர்த்து வந்த கருணாநிதி, இது போன்று கூறுவது எந்த அளவுக்கு சரியானது. காவிரி நீர் விவகாரம் குறித்து, லோக்சபாவில் பேச வாய்ப்புக் கிடைப்பதில்லை இதனால், மிகவும் வேதனை அடைந்துள்ளேன். இவ்வாறு தேவகவுடா கூறினார்.

# தமிழகத்திலும் வேகமாக பரவிவருகிற டெங்கு

(சென்னை)


தமிழகத்தில் கடந்த, 10 நாட்களில், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டோரில், 21 பேருக்கு, "டெங்கு" பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இரண்டு நாட்களில் மட்டும், எட்டு பேர் பாதிக்கப்பட்டுள்ளதால், காய்ச்சல் வேகமாகப் பரவுகிறதோ என்ற அச்சம் பொதுமக்களிடம் எழுந்துள்ளது.

சென்னையில், "ஈடிஸ்" வகை கொசுக்களால், "டெங்கு" காய்ச்சல் அதிகம் பரவி வருகிறது எட்டு நாட்களில், 13 பேருக்கு, "டெங்கு" பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது் கடந்த இரண்டு நாட்களில் மட்டும் அரசு, தனியார் மருத்துவமனைகளில், எட்டு பேருக்கு, "டெங்கு" காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை, "டெங்கு"வால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை, 21 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை தஞ்சாவூர் ஊரணிபுரம் கிராமத்தைச் சேர்ந்த ரிஸ்பானா பேகம். (வயது 6). 1ஆம் வகுப்பு படித்து வரும் இவருக்கு கடந்த சில நாட்களுக்கு முண்பு காய்ச்சல் ஏற்பட்டது. பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலன் அளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

தமிழகத்தில் டெங்கு காய்ச்சலுக்கு குழந்தைகளே அதிகம் பலியாவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி அசாத் நேற்றைய தினம் தமிழகத்தில் கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

# குஜராத் அரசுடனான உறவை புதுப்பிக்கவுள்ளது பிரிட்டன்



(அகமதாபாத்)

நரேந்திர மோடி தலைமையிலான குஜராத் மாநில அரசுடன் மீண்டும் உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளப்போவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு குஜராத் கலவரத்தின்போது, அங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த பிரித்தானியாவைச் சேர்ந்த சிலரும் கொல்லப்பட்டனர். இதையடுத்து, குஜராத் மாநில அரசுடனான உறவை இங்கிலாந்து துண்டித்துக் கொண்டது. அந்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் குஜராத் செல்வதைத் தவிர்த்தனர். நரேந்திர மோடியும் பிரித்தானியாவுக்கு போகாமல் இருந்தார்.

இந்நிலையில், லண்டனில் இங்கிலாந்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹியூகோ ஸ்வைர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், குஜராத் மாநிலத்துக்குச் செல்லுமாறு இந்தியாவுக்கான பிரித்தானிய தூதருக்கு உத்தரவிட்டுள்ளேன். இதன் மூலம், அந்த மாநில அரசுடன்ான உறவு வலுப்படும் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் இந்த அறிவிப்பு தொடர்பாக ட்விட்டர் தளத்தில் கருத்து தெரிவித்துள்ள மோடி, ஒரு நல்ல செயலை செய்யாமலே இருப்பதை விட, தாமதமாகவாவது செய்வது நல்லதுதான். குஜராத்துடன் உறவைப் புதுப்பித்துக் கொள்ள முடிவு செய்துள்ள பிரித்தானியாவின் முடிவை வரவேற்கிறேன் என்று கூறியுள்ளார்


## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ரா. தேனுசன்

முகவரி: தாளையடி வடக்கு, தாளையடி.

அகவை 8 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# காஸா மீதான தாக்குதல்களை தொடர்ந்து நடத்தும் இஸ்ரேல்



(காஸா)

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படை காஸாவின் வடமேற்குப் பிரதேசத்தில்நேற்று முன்தினம் அதிகாலை விமானத்தாக்குதலை நடாத்தியுள்ளது.


அண்மைக்காலமாக ஆக்கிரமிப்பு இஸ்ரேல் காஸா மீது தொடர்ந்து மேற்கொண்டுவரும் விமானத் தாக்குதல்களினால் பலஸ்தீன மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. காஸாவின் பல பள்ளிக்கூடங்கள் நெருக்கடியான நிலைமையைக் கருத்திற்கொண்டு மாணவர்களுக்குத் தற்காலிக விடுமுறை வழங்கியுள்ளன.

இந்நிலையில், வடமேற்கு காஸா மீதான இஸ்ரேலிய விமான ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழப்புகள் குறித்த தகவல்கள் எவையும் பதிவாகவில்லை என்றும்; இத்தாக்குதலினால் பாரிய பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதென்றும் உள்ளூர் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

சமீப காலமாக இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் காஸா மீதான விமானத் தாக்குதலில் உயிரிழப்புக்களோடு, சிறுவர்கள் உள்ளிட்ட பலஸ்தீன பொதுமக்கள் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# இந்தோனேஷியாவில் நேற்றும் நிலநடுக்கம்




(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில் கிழக்குப பகுதியில் அரு தீவுகளில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. எனவே, பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

இதற்கிடையே இங்கு 6.7 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. அரு தீவுகளில் டோபோ என்ற இடத்தில் பூமிக்கு அடியில் 80 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல்' ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் காரணமாக வழக்கத்தைவிட மிக உயரமாக அலைகள் எழும்பின. எனவே இலேசான அளவில் சுனாமி ஏற்படலாம் என எச்சரிக்கை விடப்பட்டது.

இதையடுத்து பொதுமக்கள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நேற்றைய நிலநடுக்கத்தின்போது ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

மேலும், பாகிஸ்தானை ஒட்டியுள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் எல்லையிலும் நேற்றுக் காலை 5.24 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இங்கு 4.5 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வீடுகள் குலுங்கின.

# ஆச்சரியத்தில் ஆழ்த்தும் சீன கடல் ஆமைகள்



(சிங்கப்பூர்)

மென்மையான் ஓடுடைய சீன் கடல்ஆமைகள் வாய்வழியே, தனதுகழிவுகளை வெளியேற்றுவதாக சிங்கப்பூர் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த சீன கடல் ஆமைகளின் நடவடிக்கைகள் ஆராய்சியாளர்களை மிக ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளன.

சுவாசிக்க நுரையீரலைப் பெற்றிருந்தும் இவைகள் அடிக்கடி தண்ணீருக்குள் தலையை முழ்கி எடுக்கின்றன என அவர்கள் கூறுகின்றனர். தண்ணீரில் விட்டு சோதித்ததில், இவைகள் கிட்னியிருந்தும் வாய்வழியே தமது சிறுநீர் மற்றும் கழிவுகளை வெளியேற்றுவதாக ஆராய்சியாளார்கள் ஆச்சரியப்படு கின்றனர். பொதுவாக ஆமைகளின் வாய்ப்பகுதி செவுல் தசைகள் மிகவும் சிறப்பானவை என்று கூறப்படுகிறது.

# தலிபான்களின் சூட்டிற்கு இலக்கான பாகிஸ்தான் சிறுமி கவலைக்கிடம்





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளை எதிர்த்து போராடிய மலாலா யூசுப்சாயின் (வயது 14) உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது.

பாகிஸ்தானைச்சேர்ந்த பள்ளி மாணவியான மலாலா யூசுப் சாய்(வயது 14), பயங்கரவாதத்துக்கு எதிராகப் பேசி வந்தார். இவருக்கு அமைதிக்கான தேசிய விருதை வழங்கி அந்த நாட்டு அரசு கௌரவித்துள்ளது.

இந்நிலையில் பள்ளி பேருந்தில் வந்து கொண்டிருந்த மாணவி மலாலாவை, தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த பயங்கரவாதி ஒருவன் துப்பாக்கியால் சுட்டார். இதில் சிறுமியின் தலையில் ஒரு குண்டும், முதுகெலும்பு அருகிலும் ஒரு குண்டும் பாய்ந்தது.

உடனே மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மாணவிக்கு, அறுவைச் சிகிச்சை மூலம் குண்டுகள் அகற்றப்பட்டன.

இந்நிலையில் மலாலாவின் உடல்நிலை அபாய கட்டத்தில் இருப்பதாகவும், அவரை பாகிஸ தான் பெஷாவர் நகரில் உள்ள இராணுவ மருத்துவமனையில் இருந்து ராவல்பிண்டியில்' உள்ள உயர்தர வசதியுடைய மருத்துவமனைக்கு கொண்டு செல்ல இருப்பதாகவும் வடமேற்கு கைபர பக்துன்கா மாகாண ஆளுநர் மசூத்கௌசர் தெரிவித்தார்.

துணிவுடன் பெண் பிள்ளைகளுக்காக போராடிய மலாலா குணமடைய வேண்டும் என நாட்டு மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே எங்களுக்கு எதிராக பேசி வந்த மலாலா குணமடைந்தாலும், சுட்டுக் கொல்வோம் என தெஹ்ரிக்- இ- தலிபான் இயக்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தலிபான்களின் இச்செயலுக்கு ஐ.நா பொதுச் செயலர் பான் கி மூன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் உட்பட பல உலக நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# பங்களாதேஷில் புயல் காற்று 20 பேர் உயிரைக்குடித்தது

பங்களாதேஷின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் வீசிய புயல் காற்றில் சிக்கி 10 வயதுக்குழந்தை உட்பட 20 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டின் நொகாலி பகுதியில் 8 பேரும், போலா மற்றும் சிட்டகொங்கில் தலா மூவரும் புயலில் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடும் புயல் காரணமாக பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் 200இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன், பெரிய மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. ஏராளமான கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

புயல் காற்றில் சிக்கி பலியானவர்களில் மூவரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதேவேளை, நூற்றுக்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகளும், அவற்றில் சென்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்களும் காணாமற போயுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன

# குளோனிங் செம்மறியாட்டை உருவாக்கியவர் மரணம்

உலகின் முதல் குளோனிங் உயிரினமான டோலியை (செம்மறியாடு) உருவாக்கியவர்களில் ஒருவரான பேராசிரியர் கீத் கேம்பல்(வயது 58) மரணம் அடைந்தார்.

எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் ரோஸ்லின் ஆராய்ச்சிக் கூடத்தில், கடந்த 1996ஆம் ஆண்டு குளோனிங் முறை மூலம் முதன் முதலில் டோலி என்ற செம்மறியாடு உருவாக்கப்பட்டது.

முதலில் சோதனைக்குழாய் மூலம் வளர்க்கப்பட்ட டோலி, எம்பிரியோ வளர்ச்சிக்குப் பின்னர் வாடகைத்தாய்க்கு மாற்றப்பட்டு கடந்த 1996ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி பிறந்தது.

டோலியின் உருவாக்கத்தில் தலைமை வகித்த லான் வில்மட் என்பவர் தான் இந்த செம்மறியாட்டின் படைப்பாளி என அழைக்கப்பட்டு வருகிறார்.

இந்நிலையில் ஆராய்ச்சியில் முக்கிய பங்கு வகித்த கீத் கேம்பல் என்பவர் மரணமடைந்தார். இத்தகவலை எடின்பர்க் பல்கலைக்கழக தகவல்கள் உறுதி செய்துள்ளன.

இவர் கடந்த 1991ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு வரை ரோஸ்லின் ஆராய்ச்சிக் கூடத்தில் பணியாற்றியுள்ளார்.

அதன் பின்னர், நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் விலங்குகள மேம்பாட்டுத் துறையின் பேராசிரியாராகப் பணிபுரிந்தார்.

இவர் குறித்து வில்மட், தனது சோதனையில் 66 சதவிகித பங்களிப்பை அளித்தவர் பேராசிரியர் கீத் கேம்பல் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சீன எழுத்தாளர் மோ யானுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

(ஸ்டாக்ஷோம்)


இந்த ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசு சீன எழுத்தாளர் மோயானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சீன கலாசாரத்தை மையமாக வைத்து எழுதும் இவரது எழுத்துக்கள் யதார்த்தத்தை பிரதிபலிப்பவை ஆகும். யதார்த்தமான தனது எழுத்துக்களால் மக்களின் உணர்ச்சிகளைக் கிளறும் திறன் கொண்டவர்

இதற்காகவே இவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உணர்ச்சிளைக் கிளறும் விதமாக எழுதியதற்காக பெருமதிப்பு உடைய நோபல் பரிசு அவருக்கு வழங்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

இவரது நாவல்களை அடிப்படையாக வைத்து ஹொலிவுட்டில் Red Sorghum என்ற திரைப் படம் எடுக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது. இவர் தனக்கு வைத்துக் கொண்ட புனை பெயர் தான் மோயான். இதற்கு சீன மொழியில் பேசாதே என்று அர்த்தம்!

# அமெரிக்க தூதரக அதிகாரி ஏமனில் சுட்டுக்கொலை



ஏமனில் அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக பணிபுரிந்த காசீம் அக்லன் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவில் வெளியான Innocence of Muslim படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து உலகம் முழுவதும் போராட்டங்கள் நடந்தன. இதில் அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டது.

இது தொடர்பாக நடந்து வந்த விசாரணைக்கு பொறுப்பு அதிகாரியாக காசீம் அக்லனை அமெரிக்கத் தூதரகம் நியமித்தது.

இந்நிலையில் வீதியில் சென்று கொண்டிருந்த அக்லனை அடையாளம் தெரியாத நபர்கள் சுட்டுக் கொன்றது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# துறையூரில் மீன் சந்தை நேற்று அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

புறநெகுமத் திட்டத்தின் கீழ் வேலணை துறையூர்ப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள மீன் சந்தைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மேற்படி நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 12.30 மணிக்கு வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு வட மாகாண ஆளுநரின் செயலாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் க.கமலேந்திரன், வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஸன், வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் சி.கார்த்திகேசன், வேலணை பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், தீவகம் தெற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்,



வேலணை துறையூர் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் மற்றும் வேலணை பிரதேச சபை செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி சந்தைக் கட்டடத்துக்கு மக்கள் பங்களிப்பு மற்றும் சபை நிதியுடன் சேர்த்து உலக வங்கியின் நிதி 20 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவு தயாரிப்பு முறைகள் விசேட நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற நீரிழிவு நோயாளர்களுக்கான சிறந்த உணவு தயாரிப்புப் போட்டியின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த உணவு தயாரிப்பு முறைகளை உள்ளடக்கிய நூல் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டிலான இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் "நல்லதோர் உணவு செய்வோம்" எனும் நூல் ஒன்றும் அதனுடன் சேர்ந்து "நூற்றாண்டு கடந்து நீடூழி வாழ்க" எனும் மற்றொரு நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

யாழ். நூல் நிலைய கேட்போர் கூடத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நூல் வெளியீட்டு ஆரம்ப நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் பாலகுமாரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சிறிபவானந்தராசா உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இந்த நிகழ்வில் நீரிழிவு நோயாளிகளுக்கு பிற உணவு தயாரிப்புப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட உணவுகளுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் இந்நிகழ்வில் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

# பயன்தரு மரங்கள் மீள்குடியோருக்கு வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு எஸ்.வி.சி. நிறுவனத்தால் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்த நடவடிக்கை காரணமாக இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மீளவும் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு எஸ்.வி.சி.நிறுவனம் வீட்டுத்திட்டத்தினை வழங்கியிருந்தது.

இவ்வாறு வீட்டுத்திட்டத்தினைப் பெற்றுக்கொண்ட வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை பகுதி குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் அப்பகுதிக் கிராம அலுவலர் பிரிவுகளில் வைத்து நிறுவன அதிகாரிகளால் 5 தென்னங்கன்றுகள், ஒரு மாதுளை, ஒரு பப்பாசி, ஒரு மாங்கன்று என்பன வழங்கப்பட்டன. (38)

# செத்து மிதக்கும் மீன்கள்; காரணம் கண்டறிய முயற்சி

## வட்டுவாகல் நீர்மாதிரிகள் ஆய்வுக்கு

முல்லைத்தீவு மாவட்டத்தின் வடக்கில் உள்ள வட்டுவாகல் ஆற்று மீன்கள் திடீரென்று உயிரிழந்தமைக்கான காரணத்தை கண்டறியும் முகமாக வட்டுவாகல் ஆற்றுநீர் மாதிரியை ஆய்வுக்காக புல்மோட்டையில் தங்கியுள்ள நாராய் நிறுவன அதிகாரிகளிடம் நேரடியாகக் கையளிக்கவுள்ளதாக மீன்பிடித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்தார்.

வட்டுவாகல் ஆற்றில் உள்ள மீன்கள் கடந்த 10 ஆம் திகதி திடீரென உயிரிழந்து காணப்பட்டன. இந்த வட்டுவாகலில் உயிரிழந்த மீன்களை உட்கொண்ட எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் அவர் கூறினார். முல்லைத்தீவு மாவட்டத்தின் வடக்கில் உள்ள வட்டுவாகல் ஆற்றில் வெப்பம் காரணமாக நீர்மட்டம் குறைவடைந்த நிலையில், உப்புத்தன்மை அதிகரித்தும் ஒட்சிசனின் அளவு குறைவடைந்ததுமே இந்த ஆற்றில் உள்ள மீன்கள் திடீரென உயிரிழப்பதற்கான காரணம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இருப்பினும் ஆய்வின் பின்னரே சரியான முடிவு தெரியவரும் எனவும் ஜே.சுதாகரன் குறிப்பிட்டார்.

# அரச சார்பற்ற நிறுவனங்களை முடக்க அரசு திட்டம்

அரசுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அரசின் கவனம் திரும்பியுள்ளது. அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முனையும் இந்த நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்துவருகிறது.

போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அரசுக்கு எதிராக பிரசாரம் செய்யும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக பிரசாரம் செய்யும் முயற்சியில் உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்து இந்த நிறுவனங்கள் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நிறுவனத்துடன் இலங்கையிலிருந்து இயங்கும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இரகசிய சதித் திட்டங்களை தீட்டி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை சுமத்தமுயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

## அமைச்சர்...

தெரிவித்தார். நேற்று காலை உலங்குவானூர்தி மூலம் துரையப்பா விளையாட்டரங்கில் வந்திறங்கிய அமைச்சர் பீரிஸ், யாழ். கோட்டையைப் பார்வையிட்டதுடன் பொது நூலகத்திற்குச் சென்று நூலக வசதிகள் பற்றியும் தேவைகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார். கொழும்புத்துறை மகேந்திரபுர வீட்டுத்திட்டத்தையும் பார்வையிட்ட அமைச்சர் நாவற்குழி பனை ஆராய்ச்சி நிலையத்தையும் பார்வையிட்டார்.

யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி சம்பந்தமான விளக்கக் கலந்துரையாடலிலும் அமைச்சர் கலந்துகொண்டார். தொடர்ந்து சிவில் சமூகத்தினரையும், பத்திரிகையாளர்களையும் சந்தித்தார். யாழ். போதனா வைத்தியசாலையின் குறைபாடுகள், தேவைகள் பற்றியும் மருத்துவர் தட்டுப்பாடுகள் பற்றியும், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அமைச்சருக்கு எடுத்துரைத்ததுடன், மக்களின் காணிகளில் இராணுவ ஆக்கிரமிப்புப் பற்றியும் அமைச்சருக்கு சிவில் சமூகத்தினர் எடுத்துரைத்தனர், வர்த்தக சமூகம் சார்பாக பூரணச்சந்திரன், வெளிநாட்டு தவிகள் சரியாக முதலிடப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டினார். அத்துடன் சீன அதிகாரிகள் குழுவினரையும் அமைச்சர் சந்தித்தார்.

வீதிகள், மின்சாரம், குடிநீர் பிரச்சினைகள் பற்றி மக்கள் சார்பாக பொதுமக்களின் பிரதிநிதி ஒருவர் அமைச்சருக்கு விளக்கமளித்தார். குறைகளையும் தேவைகளையும் கேட்டறிந்த அமைச்சர், இதற்குப் பொறுப்பான அமைச்சர்கள் மூலம் சரியான தீர்வு காண்பதாக உறுதியளித்தார். நண்பகல் விஜயத்தை முடித்துக்கொண்டு அமைச்சர் கொழும்பு பயணமானார். (பா,இ)

## மனித...

மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுக் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு வருவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த நிலையில் இராணு உயர் அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பான தெளிவூட்டல்களை வழங்க ஏற்கனவே திட்டமிடப்பட்டதாக ஆணைக் குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். இராணுவத்தினரைத் தவிர வேறு சில தரப்பினரையும் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வுகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கை மாறியது...

சேர்ந்த பெண் ஒருவர் கைதடி மகப்பேற்று வைத்தியசாலையில் குழந்தையொன்றைப் பிரசவித்திருக்கின்றார். அந்தக் குழந்தையை வறுமை காரணமாக மானிப்பாயில் உள்ள தம்பதியினருக்குக் கொடுத்துப் பராமரிக்குமாறு கூறியிருக்கின்றார். இந்த நிலையில் அந்தத் தம்பதியினர் உரிய முறையில் பராமரிக்காது வைத்திருக்கின்றனர். இவ்விடயம் மானிப்பாய் பொலிஸாருக்குத் தெரியவரவே சுகயீனமுற்ற அந்தக் குழந்தை மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தாயாரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது. நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார். (பா)

## வடக்கில்...

உள்ள கண்ணிவெடிகளையும், ஏனைய வெடிபொருட்களையும் அகற்றுவதற்கு கொடையாளி நாடுகளே நிதியுதவியை வழங்கி வருகின்றன. இந்த நிதியுதவி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கலே இதற்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா உள்ளூர் மற்றும் சர்வதேச கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களும் நிதிப்பற்றாக்குறையை எதிர்நோக்கியிருப்பதாகவும் அதுபற்றி கொடையாளி நாடுகளிடம் பேச்சு நடத்திருப்பதாகவும் எப்.எஸ்.டி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஷார்ட்மட் தொம்ஸ் கூறுகின்றார்.

யுத்த மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள பொதுமக்கள் மத்தியில் கண்ணிவெடி, மிதிவெடி மற்றும் அடையாளம் தெரியாத வெடிப்பொருட்களின் ஆபத்து பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் எ.ப்.எஸ்.டி அமைப்பு நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் பி.பி.சி.யிடம் பேசிய எப்.எஸ்.டி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள நிதிச் சிக்கல் பற்றி விபரித்தார். இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கிட்டத்தட்ட 113 சதுர கிலோ மீற்றர் பரபபளவான பிரதேசத்தில் கண்ணி வெடிகள் அகற்றப்பட வேண்டியிருப்பதாக ஒச்சா எனப்படும் மனிதாபினமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகம் அறிக்கை யொன்றில் கூறியிருக்கின்றது. இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் கண்ணிவெடி தொடரபான வெடிச் சம்பவங்களில் மாத்திரம் 4 குழந்தைகள் உயிரிழந்துள்ளன. 32 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## சமாதானத்திற்...

கிளர்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு குழப்ப நிலைமைகள் நிலவிவரும் சந்தர்ப்பத்தில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் 1999 ஆம் ஆண்டில் மெடிசின்ஸ் சான்ஸ் பொரன்டைரஸ் என்ற அமைப்பிற்கு நோபல் உலக சமாதான விருது வழங்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் சமூகப் பொருளாதார நெருக்கடிகள் நிலவி வருவதனை மறுப்பதற்கில்லை என நோபல் விருது வழங்கும் குழுவின் தலைவர் தொர்பொஜ்ரோன் ஜக்லாண்ட் தெரிவித்துள்ளார். எனினும், ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஆறு தசாப்த காலமாகப் பிராந்திய வலயத்தின் சமாதானத்திற்காக ஆற்றிவரும் அளப்பரிய சேவையை கௌரவிக்கும் நோக்கில் இந்த விருது வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுங்கள் அமைச்சர் பீரிஸிடம் கோரிக்கை முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப் பகுதியில் மீள் குடியமர்ந்து சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் எதுவித வாழ்வாதார உதவிகளுமின்றி வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக நேற்று யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் அப்பகுதி சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவு கடல் நீரேரியைச் சூழவுள்ள இந்தப் பகுதியில் எதுவித வாழ்வாதார நடவடிக்கையினையும் மேற்கொள்ள முடியாது இந்தக் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர் இந்தக் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டு ஆறு மாதங்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகவும், இதன் பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டு விட்டதாகவும் தெரிவித்துள்ளார். எனவே இந்தக் குடும்பங்கள் வறுமை நிலையை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததுடன், இந்தக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க வேண்டியதனையும் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

மேலும் மீள்குடியமர்ந்ததன் பின்னர் சில குடும்பங்களுக்கு ஒரு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டதாகவும் குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாகியுள்ள குடும்பங்களுக்கு துவிச்சக்கர வண்டி தேவையையும் எடுத்துக் கூறினர். பாடசாலை செல்வதற்கு மாணவர்கள் அதிக தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பதனை எடுத்துக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் உள்ள 42 வைத்தியசாலைகளில் 10 வைத்தியசாலைகள் யுத்தத்தின் போது முழுமையாகச் சேதமடைந்திருந்ததாகவும் அவ் வைத்தியசாலைகள் தற்சமயம் நிர்மாணிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்ததுடன், இந்த வைத்தியசாலைகளை இயங்க வைப்பதற்கு ஆளனிப்பற்றாக் குறை உள்ளதாகவும் அமைச்சர் பீரிஸிடம் எடுத்துக் கூறினர்.

இதேவேளை, சிவில் சமூகப் பிரதிநிதிகள் சார்பில் அருட்தந்தை ஒருவர் இடம்பெயர்ந்த மக்களது பிரச்சினைகள் குறித்து கருத்து தெரிவிக்கையில், உறவினர் வீடுகளிலும், முகாம்களிலும் தங்கியுள்ள மக்களை அவரவர் பகுதிகளில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

படையினரது பாவனையில் உள்ள பகுதிகளும் விடுவிக்கப்பட்டு அந்ததப் பகுதி மக்கள் அங்கு மீள்குடியமர்த்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உங்களது பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினதும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளினது கவனத்திற்கும் கொண்டு வருவதாகத் தெரிவித்தார். (பா, இ)

# கடன் வழங்கல் பேச்சுவார்த்தை

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள 250 கோடி அமெரிக்க டொலர் கடன்தொகையின் மேலதிக கொடுப்பனவுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் இடம் பெறவுள்ளன.

இது தொடர்பாக நிதியத்தின் குழுவொன்று இலங்கை வரவுள்ளதாக வர்த்தக தரப்புச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு பிரதிநிதி கோஷி மாத்தாய் நிதிய அதிகாரிகளுடன் வழமையான கருத்து பரிமாறல்களை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சி குறைந்த அளவில் உள்ள போதிலும் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி ஸ்திரத்தன்மையினை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் பொதுநலவாய மாநாடு

(கொழும்பு)

எதிர்வரும் வருடத்திற்கான பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு நவம்பர் மாதம் 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு பொதுநலவாய நாடுகளின் வர்த்தக சம்மேளனத்தின் அறிமுகப்படுத்தல் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெற்றது.

இந்த முறை பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டின் தொனிப்பொருளாக 'வளங்களை பகிர்ந்து கொள்ளுதலும், சமூக அபிவிருத்தியும்' என்ற வாசகம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் முதலீட்டுத் துறைகளில் மொத்த உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைந்த ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

இதனூடாக வர்த்தக சமூகத்தினரை கொழும்பு நோக்கிக் கவர்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

54 நாடுகளின் அங்கத்துவத்துடனான பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாடு, அந்தந்த நாடுகளின் சம்பிரதாயபூர்வ மற்றும் அதனைச் சாராத வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நீர் விநியோக அபிவிருத்தி

வடக்கு மற்றும் வடமேல் மாகாணத்திலுள்ள சில முக்கிய நகரங்களில் நீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இந்த நடவடிக்கையால் வவுனியா, மன்னார், புத்தளம் மற்றும் சிலாபம் ஆகிய நகரங்களில் வாழும் நான்கு இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நன்மையடைவார்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உத்தேசத் திட்டத்திற்கு 113.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே 59.7 மில்லியன் டொலர் கடனையும் 23.2 மில்லியன் ரூபா உதவித் தொகையையும் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டதத்திற்காக தற்போது கையிருப்பில் உள்ள தொகை போதாமை காரணமாக மேலும் 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.



சீனத் தூதுவராலயப் பிரதிநிதிகள் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவை நேரடியாக சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது யாழ்.நகரின் அபிவிருத்தி மற்றும் காப்பற் வீதிகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து அறிந்து கொண்டனர்.

இதன்போது சீனத் தூதுவராலய மக்கள் சீனக்குடியரசு பிரதிநிதி திரு.றென்பக்கு வெங் மற்றும் அவரது குழுவினர்கள் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.

# பிள்ளையார் சிலை திருட்டு சண்டிலிப்பாயில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அரசடி சித்தி விநாயகர் கோவிலில் இருந்து ஐம்பொன்னினால் ஆன பிள்ளையார் சிலை ஒன்று கடந்த புதன்கிழமை இனந்தெரியாதவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இரவு வேளையிலேயே இந்தச் சிலை திருட்டுத்தனமாக அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் குறித்த ஆலய நிர்வாகத்தினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுவரை சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனைத் தெரிவித்தார். (பா)

# பாலியல் துஷ்பிரயோகம் இளைஞர் பொலிஸாரால் கைது

கரவெட்டிப் பகுதியில் ஒன்பது வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிரதிப் பொலிஸ மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது, கரவெட்டிப் பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்றிருந்த குறித்த சிறுமியை அந்தக் கடையில் வேலை செய்து வரும் 22 வயதுடைய இளைஞர் ஒருவரே பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் 14 வயதுச் சிறுமியைக் காதலித்து கல்யாணம் செய்வதாக ஏமாற்றி பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய 25 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. (பா)

# சர்வதேச முட்டை தினம்

(கொழும்பு)

சர்வதேச முட்டை தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. 1995 ஆம், 96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதன் முறையாக இத்தினம் நினைவு கூறப்பட்டது.

அதன் பின்னர் வருடாந்தம் ஒக்ரோபர் மாதம் இரண்டாவது வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

முட்டையில் அதிகளவான போஷனை நிறைந்துள்ளது. அது பாலுக்கு சமமான போசனை மட்டத்தை கொண்டுள்ளது.

குறிப்பாக முட்டை மந்த போஷனையை தவிர்க்கிறது.

இருந்தபோதும், மகிமை பெற்ற முட்டையை பலர் வெவ்வேறு காரணங்களுக்காக தவிர்க்கிறனர்.

இவ்வாறான நிலையில் முட்டையில் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேச முட்டைகள் தினம் நினைவு கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மலையக மக்களின் போசனையை மேம்படுத்தும் முகமாக, ஹட்டன் நகரிலும் இந்த முட்டை தினம் நினைவு கூறப்பட்டது.

மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் மத்தபோஷனை 144 சதவீதம் நிலவுவது குறிப்பிடத்தக்கது.



திவிநெகும திட்டத்தின் கீழ் 45 பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் விநியோகம் நேற்று உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் பிரதேச செயலர் எஸ்.நந்தகோபாலன், வலி.தெற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களான அரிகரன், இராசசேகரம், தேவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வைத்தியசாலைக்கு முன் முளைக்கும் நடைப்பாதைக் கடைகள்

(குருநகர்)

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதைக் கடைகள் மீண்டும் களை கட்டத் தொடங்கி விட்டன.

இதனால் மக்கள் வீதிக்கு இறங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. வாகன நெரிசல் நேரங்களில் மக்களும் வீதிகளில் இறங்குவதால் போக்குவரத்தில் நெரிசல் தோன்றி விபத்துக்கள் ஏற்படும் அபாயங்கள் நிலவுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை ஆஸ்பத்திரி வீதி காப்பெற் போடும் சமயங்களில் ஒரு வழிப்பாதையூடாக இருபுற வாகனங்களும் செல்ல நேர்கையில் மக்கள் நடை பாதைக்குள் நுழைய முடியாமல் கடைகள் விரிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் நடைபாதைக் கடைகள் பிரதான வீதி சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்குஎதிரிலும் புதிதாக முளைத்துள்ளதால் அப்பகுதியிலும் போக்குவரவு நெரிசல்கள் உருவாகி வருகிறது. (68)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.